70

உ

# வைத்திய சந்திரிகா

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல் வாரத்தில் வெளிவரும்.

Vol. 1. May 1939. No. 6.

OFFICE OF THE REGISTRAR OF ...
22 MAY 1939
MADRAS

## விஷய சூசிகை.

டாக்டர் ராஜன் அவர்களும் சுதேச வைத்யமும் பத்திராதிபர் ... 1-8
ஔஷத சாரம் பண்டிட் நாராயணய்யங்கார் ... [illegible]–51
ஸஹஸ்ரயோகம் டாக்டர் T. S சுப்ரமண்யம் ... 48–51
வைத்தியச் செய்திகள்-காரியதரிசி சுதேச வைத்திய ஸபை 9

| சந்தா விகிதம். | விளம்பர விகிதம். |
|---|---|
| வருஷ சந்தா:— | மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8 |
| உள் நாட்டுக்கு ரூ. 2 | ,, ,, ½-க்கு ரூ 4 |
| வெளிநாட்டுக்கு ரூ. 3 | ,, ,, ¼-க்கு ரூ 2 |

கிடைக்குமிடம்:—

ஆயுர்வேத வைத்தியர், T. S. சுப்ரமண்யம்,
35, காக்காத்தோப்புத்தெரு, மதுரை.

Pandit, S. NARAYANA IYENGAR.
Editor and Publisher

...ங்கடேஸ்வர் பிரஸ், மதுரை—39.

[விலை 0—3—0

## T. S. N. ரணநிவாரிணி என்னும் களிம்பு.

மேற்படி களிம்பு எல்லாவித வெட்டுக்காயங்கள், அடிபட்ட காயங்கள், வேனற்கட்டி, ரத்தக்கட்டி, முகப்பரு, சொறி, சிரங்கு, கரப்பான், மேகவிரணம், அக்கி, மேகப்படை, எச்சிற்தழும்பு, மூலமுளைகள், நெருப்புக் காயங்கள் முதலிய தோலில் வரும் சகல வியாதிகளுக்கும் மேலுக்கு உபயோகிக்கப்படும் ஓர் அத்யற்புதமான களிம்பு. இதை ஷடி வியாதிகளில் மேலுக்குத் தடவினால் எரிச்சல் முதலிய ஒருவித தொந்திரவுமின்றி மிகவிரைவில் குணப்படுத்துமென்பது திண்ணம். பலர் இதை உபயோகித்து நல்ல பலன் அடைந்திருக்கின்றனர்.

சிறிய பாட்டில் விலை அணு **5**. பெரிய பாட்டில் விலை அணு **9**.

தபாற் சிலவு வகையறு பிரத்யேகம்.

விலாசம்:—

T. S. நாராயணசாமி அய்யர்.
சித்த ஆயுர்வேத வைத்தியர்
35, காக்காத் தோப்புத் தெரு, மதுரை.

## T. S. N. கர்ணபிந்து அல்லது காதுதைலம்.

இந்தத்தைலம் காதுகளில் உண்டாகும் குத்துவலி, சீழ் வடிதல், புண்கள், காதிரைச்சல், காதடைப்பு, சிலவகை செவிடு, முதலிய காதுகள் சம்பந்தமான எல்லா வியாதிகளையும் குணப்படுத்தும். குழந்தைகள் முதல் சகலரும் உபயோகிக்கலாம். பலர் உபயோகித்துப் பூர்ண குணம் பெற்றிருக்கின்றனர்.

சிறியபாட்டில் $\frac{1}{8}$ அவுன்ஸ் அணு **2** பெரியபாட்டில் $\frac{1}{2}$ அவுன்ஸ் அணு **7**

இன்னும் எல்லாவித சாஸ்திரீயமான மருந்துகளும் இவ்விடம் கிடைக்கும்.

தபாற் சிலவு வகையறு பிரத்யேகம்.

விலாசம்:—

T. S. நாராயணசாமி அய்யர்.
சித்த ஆயுர்வேத வைத்தியர்
35, காக்காத்தோப்புத் தெரு, மதுரை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 MAY 1939
MADRAS

## டாக்டர் ராஜன் அவர்களும் சுதேச வைத்யமும்.

சென்னை அசெம்பளியில் 26—3—39-ல் டாக்டர் ராஜன அவர்கள் சுதேச வைத்ய விஷயமாகத்தன் முழு பலத்தையும் கொண்டு தாக்கிப்பேசி யிருப்பதின் சாராம்சத்தை சென்ற மாத சந்திரிகையில் வெளியிட்டோம். இனி அவர் சுதேச வைத்திய விஷயமாக பேசியதின் நியாயா நியாயங்களைச்சற்று கவனிப்போம்.

1. சுதேச முறைகளில் பல குறைகள் பல நூற்றாண்டுகளாக சம்பவித்திருப்பதாக இவர் பேசியுள்ளார். சுதேச முறையைக் குரு முகமாகப்பயின்றதாகப் பெருமைகொள்ளுமிவர் அக்குறைகளை ஒன்று, இரண்டென கணக்கிட்டே சொல்லியிருக்கலாம். ஒரு குறையையும் வாய்விட்டுச்சொல்லாமல் குறைவுகளிருப்பதாகக் கனவுகண்டு மேன்மேலும் பேசியிருப்பது சற்றும் பொருந்தாது. உண்மையில் தேசியமுறைகளில் குறைகள் இருப்பதாகக்கண்டால் அதை அபிவிருத்திக்குக் கொண்டுவரவேண்டுமென யாரும்விரும்ப மாட்டார்கள். குறையொன்று மில்லாத முறை உலகத்திலேயே கிடையாது. இவர் துதி பாடும் ஆங்கில முறைகளிலும் பல குறைகள் இருப்பதாக ஆங்கில வைத்தியர்களே அதிலும் வெள்ளைக்கார வைத்தியர்களே ஓயாமல் பேசியும் எழுதியும் இருக்கின்றனர். (வைத்திய சந்திரிகை 1938ஆு டிசம்பர்மாத சஞ்சிகையைப்பார்க்கவும்) சுதேச முறைகளிலும் சில குறை இருக்கலாம். குறைகள் குறைந்தும் குணம் நிறைந்துமுள்ள முறைகளாகவிருப்பது காரணமாகவே மேல்நாட்டு மோகம்கொண்ட நமது நாட்டு ஆங்கிலம் படித்த கனவான்கள் கூட பலர் சுதேசவைத்தியமே ஆசேது ஹிமாசலம் செய்துகொள்வதை யாரும் மறைக்கமுடியாது. நவீன நாகரீகம் மலிந்த சென்னை கஸ்பாவில் ஆங்கிலம் படித்த அறிவாளிகள் ஆங்கில வைத்தியத்தில் வெறுப்பு கொண்டு சுதேச வைத்தியத்தையே செய்துகொள்ளுவதை யார் மறுக்கமுடியும். அந்தந்த ஸ்தாபனங்களில் உள்ள ரிஜிஸ்டர் புஸ்தகத்தைக்கவனித்தால் இந்த உண்மை விளங்கும். தகுந்த காரணமின்றி படித்த அறிவாளிகள் ஓர் முறையைக் கொணடாடுவது சுலபமல்ல. அவர்களனைவரும் தேசாபிமானத்தால் மதிமயங்கிவிட்டதாக விவேகிகள் நினைக்க மாட்டார்கள். பம்பாய், கல்கத்தா போன்ற நாகரீக நகரங்களில்

21072 சென்னை 008

சுதேச வைத்தியம், படித்த ஜனங்களால் மிகவும் கௌரவிக்கப்படுவது கண்கூடாகக் காணலாம். பெரிய அந்தஸ்தில் இருக்கும் கனவான்கள் ஆயிரக்கணக்காகச் சிலவுசெய்து மலையாளத்தில் சுதேச சிகித்சை பெறுவதை பிரத்யக்ஷமாகக் காணலாம். இவர்களை அவிவேகிகள் என்று டாக்டர் ராஜன் அவர்கள் கூறுவார் என நினைக்க முடியாது. சுதேச சிகித்சையில் விசேஷ பலனை அவர்கள் அனுபவிக்காமல் கண்மூடித்தனமாக விருப்பதாக யாரும் சொல்லமுடியாது. ஓர் முறை நல்லதென்றோ அல்லது கெட்டதென்றோ அதன் பலனைக்கொண்டே தீர்மானிக்கவேண்டும். நகரங்களிலும் கிராமங்களிலும் படித்த பலர் பிரத்யக்ஷ பலனைக்கண்டு ஆதரிக்கும் ஓர் முறையைக குற்றமுள்ளதெனக் கூறுவது விந்தையே.

2. மேல்நாட்டு முறைகளுடன் சுதேச முறைகளை ஒப்பிடவே முடியாதென்பது இவருடைய இரண்டாவது கக்ஷி. ஊன்றி கவனிப்போருக்கு இது ஓர் துர்க்கக்ஷியென்பது நன்கு விளங்கும். மேல்நாட்டுமுறை சஸ்திர சிகித்சையில் மிகவும் விருத்தியடைந்திருப்பதும் இனி சுதேச முறை சஸ்திர சிகித்சையில் மேல்நாட்டு முறையுடன் போட்டிபோட முடியாதென்பதும் மறக்கமுடியாத உண்மை. அவ்விதமே மருந்து விஷயங்களில் கீழ்நாட்டு முறைகளுடன் மேல்நாட்டு முறை சம அந்தஸ்து அடையமுடியாதென்பதையும் உணரவேண்டும். சாதாரணமாக முறைக்காய்ச்சல் ரக்தக்கடுப்பு இம்மாதிரியான இரண்டொரு வியாதிகளில் குவைனு எமிடைன், போன்ற இரண்டொரு மருந்துகள் ஆங்கில முறையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றதேயன்றி மற்ற வியாதிகளுக்கு நாளதுவரையில் ஷை முறையில் மருந்துகளே கண்டுபிடிக்கப்படவில்லை. உதாரணமாக காய்ச்சல், ஜன்னி, டைபாயிட், இதுபோன்ற நோய்களில் diaphoratic mixture (அதாவது வியர்வையையுண்டு பண்ணும் மருந்துகள்) அல்லது saline mixture களைத்தவிரவேறு மருந்துகள் ஆங்கில முறையில் உண்டா? அனேகமாக எல்லாக் காய்ச்சல்களை அதன் போக்கில் விடவேண்டியதைத் தவிர அதை யடக்குவதற்கு வேறு தகுந்த மருந்து ஏதாவது ஒன்று உண்டா? இந்த ரகசியம் நோயாளிக்குத் தெரிந்தால் எவரும் இந்த சிகித்சைக்கு சம்மதியான். ஏதோ புரியாத மருந்தை சீசா

வில் வாங்கிக்கொடுத்து வருவதை நோய்க்குத் தகுந்த மருந்தென
நினைத்தே நோயாளி திருப்தியடைகின்றனன். சுதேச முறைகளில்
ஷை வியாதிகளுக்குப் பல மருந்துகள் இருப்பதையும் அவை
அனுபவத்தில் மிகுந்த பலன் அளித்துவருவதையும் ருசுப்படுத்த
பல சாக்ஷிகள் உண்டு. டாக்டர் ராஜன் அவர்கள் இரு முறைகளை
யும் இவ்விதமாகப் பரிசீலனை செய்து அனுபவத்தில் சுதேசமுறை
கள் தாழ்ந்தவை யென ருசுப்படுத்தினால் அதை யாரும் ஆக்ஷே
பிக்கமுடியாது. எக்ஸ்ரே ரேடியம் முதலியன சுதேச முறைகளில்
இல்லாததை ஓர் குறையாக இவர் கூறுவதையும் ஒப்பமுடியாது.
சுதேச முறைக்கு அவை தேவையா வென்பதை இவர் கவனிக்க
வில்லை. இவைகளின் உதவியில்லாமல் சுதேச முறைப்படி சிகித்
சை செய்ய முடியாவிட்டால் அப்பொழுது இவர் கூறுவது நியாய
மாகும். ஆங்கில முறைகளுக்கே இவை தேவையானவை யான
தால் இவைகளின் உதவியை விரும்பாத முறைக்கு இவை யில்லா
தது குறையாகாது. சில வியாதிகளில் சிகித்சைக்காக மருந்தும்
மந்திரமும் ஆயுர்வேதத்தில் சொல்லப்பட்டிருப்பதாக இவர் பரிகா
சம் செய்வதும் அநீதமே. உண்மையில் வடமொழி நூல்களில்
அதாவது சரகம் முதலிய நூல்களில் வியாதிகளில் மந்திரம் சொல்
லப்பட்டிருப்பதாக இவர் நினைப்பது பிசகு. அப்புஸ்தகங்களில்
மந்திரம் சொல்லப்படவில்லை யென்பது படித்தவர்களுக்குப் புலப்
படும். சில தமிழ் நூல்களில் மந்திரம் சொல்லப்படுவது உண்மை
யே. மந்திரங்களை இவர் நம்பாவிட்டாலும் பலர் மந்திர சக்தி
களால் பல அபூர்வ குணங்களைக் கொடுத்துவருவது இன்றைக்கும்
பிரத்யக்ஷம். மேலும் அந்நூல்கள் பல மருந்துகளையும் சொல்லி
யிருப்பதையும் கவனிக்கவேண்டும். மருந்துகளைச் சொல்லாமல்
தனி மந்திரங்களை மாத்திரம் சொல்லியிருந்தால் அப்பொழுது
இவர் கூறுவதை நாமும் ஒப்புக்கொள்ளவேண்டியதே. சுதேச
நூல்களில் பல மருந்துகள் சொல்லப்படாத ஒரு வியாதியையா
வது இவர் எடுத்துக்காட்ட முடியுமா? ஒரு மருந்துகூட சொல்
லப்படாமல் பல வியாதிகள் மாத்திரம் சொல்லப்பட்டிருப்பதை
ஆங்கில நூல்களில் காணலாம். Stronger antipyretic drugs are
some times given in single doses when the temperature

reaches a certain height, such as 102 or 103. The result is that the temperature falls within two or three hours, and, remaining low for a time, rises again in six or seven hours to a height not much different, if at all, from what it would have reached had no antipyretic been given. காய்ச்சலை பலாத்காரமாக அடக்கக்கூடிய (பெனசிடின், ஆண்டிபைரின், ஆண்டிபெப்ரின், ஆஸ்பிரின்) மருந்துகளை காய்ச்சல் 102, 103 டிக்கிரி இருக்கும்பொழுது கொடுத்தால் இரண்டு அல்லது மூன்று மணிகளில் காய்ச்சல் தணியும். தணிந்த அளவிலேயே சில மணிகள் இருக்கும். ஆறு அல்லது எழு மணிகளுக்குப்பிறகு திரும்பி யதாபிரகாரம் காய்ச்சல் பழைய நிலைமைக்கே உயர்ந்துவிடும். ஷடி மருந்துகளைக் கொடுக்காமலிருந்தால் காய்ச்சல் எந்த அளவுக்கு உயருமோ அந்த அளவுக்கே (இந்த மருந்துகள் கொடுத்தும்) உயர்ந்துவிடும்.

3. டாகடர் ராஜன் அவர்கள் மிகவும் அபிவிருத்தியடைநத தாகப்பெருமைகொள்ளும் ஆங்கில முறைகளில் பல வியாதிகளுக்கு மருந்தே கிடையாதென்று சொல்லியிருப்பதையும் அவைகளுக்கெல்லாம் சுதேச முறைகளில் மருந்துகள்சொல்லப்பட்டிருப்பதையும் அறிந்த பல அறிவாளிகள் சுதேச முறைகளைப் பயன்படுத்தி கொள்வதில் ஆச்சரியமொன்றுமில்லை.

4. ரோகங்களை நிர்ணயிப்பதில் பல கருவிகளின் உதவி வேண்டியிருப்பதையும் அக்கருவிகள் சுதேச முறைகளில் கிடையாதென்பதையும் பற்றி குறை கூறப்படுகின்றது. இதை நாம் ஓரளவு ஒப்புக்கொள்ளுகின்றோம். உண்மையில் ஆங்கில வைத்தியர்கள் படிப்பளவில் கருவிகளின் உதவிகளைத் தெரிந்துகொண்டிருக்கின்றனரே யன்றி ஒவ்வொரு நோயாளியையும் தாங்கள் படித்தமாதிரி பரீக்ஷித்து நோயை நிதானிக்கின்றனரென்று சொல்ல முடியாது. ஆங்கில வைத்தியர்கள் ஒவ்வொருவரும் சொந்தமாக லேபரேடரி வைத்துக்கொண்டு ரக்த பரிசோதனை நடத்துகின்றனரா. சென்னை மாகாணத்திற்காகச் சில இடங்களிலேயே அந்த

வசதியிருப்பதும் மற்ற பல இடங்களில் வசதிகள் இல்லாமலிருப்பதும் யாவரும் அறிந்ததே. ஆகவே சுதேச வைத்தியர்கள் போலவே வியாதிக்கூறுகளை வெளி அடையாளங்களைக்கொண்டே நிதானித்து சிகித்சை செய்கின்றனர். ஆகவே புஸ்தகங்களில்பல கொள்கை சொல்லப்பட்டிருந்தும் நடை முறையில் அவை பின்பற்ற முடியாமலிருக்கின்றன.

ஆகவே காய்ச்சலுக்குத் தகுதியான மருந்தே ஆங்கிலத்தில் இல்லையென்பதும் அதிகக்காய்ச்சலைத் தணிப்பதற்கு பனிக்கட்டி முதலியவைகளே அனுஷ்டானத்திலிருப்பதும் கண்கூடாகக்காணுகின்றோம். டைபாயிட் என்ற வியாதியில் ஆங்கில நூல் கூறுவதாவது—Nothing can cut short the desease; it will have its own course. (இவ்வியாதியைத்தணிப்பதற்கு மருந்து கிடையாது. இவ்வியாதி தன் போக்கில்போய் தானாக நிற்கும்.) இந்தியாவில் விஸ்தாரமாகப்பரவி மனிதர்களைக்கொள்ளைகொண்டு போகும் டைபாயிட்டுக்கு மருந்து கிடையாதென ஆங்கில நூல்கள் ஒளிமறைவில்லாமல் பேசுகின்றன. இனி நுமோனியா என்ற வியாதியைப் பற்றி ஆங்கில நூல்கள் கூறுவதைக் கவனிப்போம். It is an established fact after the discovery of Pneumococci that no earthly means known at present can cut short the duration of Pneumonia; an attempt to bring down fever by antpyretics, such as antifebrin, antipyrine, phenacetin, are not only useless but injurious. The desease will have its own course. (நுமோனியாக்காய்ச்சல் ஓர்விதப்பூச்சியால் உண்டாவதாகக்கண்டுபிடித்த பிறகு தத்காலம் அறிவுக்கு எட்டியமட்டில் இவ்வியாதியின் கால அளவைக் குறைக்க உலகிலே உபாயம் ஒன்றுமில்லையென்பது தீர்ந்தவிஷயம். பெனா சிடின். ஆன்டிபைரின், ஆன்டிபெப்ரின், ஆகிய இம்மருந்துகள் இவ்வியாதியில் நிஷ்பலன் என்பது மாத்திரமல்ல, இவைகளை உபயோகித்தால் தீங்கும் விளையும். இவ்வியாதி தன் போக்கில் போய் நிற்கும்) இந்தியாபோன்ற உஷ்ணப்பிரதேசங்களில் வியாபகமாகவிருக்கும் இந்த முக்கிய நோய்களுக்கு மருந்து கிடையாதென்றும் இந்நோய்கள் ஒன்றுக்

கும் கட்டுப்படாமல் அதனதன் காலவளவிலேயே சாந்தமாகுமென ஆங்கில நூல்கள் கூறுகின்றன. ஆனால் இந்நோய்களுக்கு சுதேச நூல்களில் ஏராளமான மருந்துகள் சொல்லப்பட்டிருப்பதைப்பல ரும் அறியலாம். (வைத்யசாரம் ஔஷதசாரத்தில் காண்க.)

5. பாட புஸ்தகங்கள் இல்லையென்பது மற்றொரு குறை சென்னை சுதேச வைத்திய பாடசாலையில் பாட புஸ்தகங்கள் வைக்கப்படாமலிருந்தால் அது சுதேச முறைகளின் குற்றமாகா. சென்னை யூனிவர்சிடியில் வைத்திய சிரோமணிக்குப் பாடபுஸ்தகங்கள் வைக்கப்பட்டிருப்பதை டாக்டர் ராஜன் அவர்கள் அறியார் போலும். மேலும் அகில இந்திய ஆயுர்வேத மகா மண்டலத்தின் பலவகைப்பட்ட பரீக்ஷைகளில் ஒழுங்காகப் பாடபுஸ்தகங்கள் வைக்கப்பட்டுப் பரீக்ஷைகளும் பிரதி வருஷமும் நடந்துவருவது பிரசித்தம். ஆங்கில வைத்திய பாடசாலைகளில் கற்பிக்கப்படும் விஷயங்களாவன —(1) Physics (2) Chemistry (3) Biology (4) Anotomy (5) Physiology (6) Bio chemistry (7) Histology (8) Pathology (9) Bacteriology (10) Parasitology (11) Pharmacology (12) Hygiene (13) Medicine (14) Surgery (15) Medical jurisprudance (16) Midwifery. இவைகளுக்கு முறையே தமிழில் (1) பௌதிகநூல் (2) ரசாயனநூல் (3) பிராணிகள் செடிகொடிகள் நூல் (4) சாரீரநூல். (உடற்கூறு சாஸ்திரம்) (5) (சாரீர) இயற்கைத்தொழில் நூல் (6) சாரீர ரசாயனநூல் (7) சாரீர அணுபரீக்ஷா (8) (வியாதியைபொட்டி) உடல் மாறுபாடு (9) ஜீவாணுவிளக்கம் (10) கிருமிநூல் (11) பதார்த்தகுணம் (12) சுகாதாரம் (13) மருந்துவாகடம் (14) சஸ்திர சிகித்சை (15) மருத்துவச்சட்ட நூல் (16) பிரசூதிசாஸ்திரம் எனச்சொல்லலாம். இவற்றுள் முதலாவது பௌதிகநூல் என்பது காற்று, உஷ்ணம், மின்சாரம், முதலியவைகளைப்பற்றிச் சொல்லும் நூல். இதில் சுதேச வைத்யர்களுக்குத் தெரிந்துகொள்ளவேண்டியவை மிக சுவல்பமே. ஆகவே இதின் விஸ்தாரம் சுதேச நூல்களில் காணப்படவில்லை. இரண்டாவதான ரசாயன சாஸ்திரம் சுதேச நூல்களுக்கு ஏற்ற முறையில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ரஸரத்ன ஸமுச்சயம், ரசரத்னாகரம், ரசேந்திர சிந்தா

மணி முதலிய நூற்றுக்கணக்கான நூல்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. மூன்றுவது செடி கொடிகளையும் ஜீவராசிகளையும் விவரிக்கும் நூல். இதில் வைத்யர்களுக்கு வேண்டிய விஷயம் பூஜ்யம் நான்காவது உடற்கூறு சாஸ்திரம். இது சுச்ருதம், சரகம், முதலிய நூல்களில் காணலாம். ஆங்கில நூல்களில் போல விஸ்தாரமாகச்சொல்லப்படவில்லை யென்பது உண்மையே உள் உறுப்புகள் ஒவ்வொன்றையும் இவை வர்ணித்திருப்பதை மறுக்கமுடியாது. அவை சஸ்திர சிகித்சைக்கு ஓர் சமயம் போதுமானதல்ல வென்றபோதிலும் ஔஷத முறைகளுக்குப் போதுமானதே. 5 வதும் சுச்ருதம் முதலியவைகளில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. 6 வதான சாரீர ரசாயனமும் ஸப்ததாதுக்கள் எனப்பிரித்து ஷை நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. 7 வதான சரீர அணுபரீக்ஷா என்பது சுதேச வைத்யத்தில் சொல்லப்படவில்லை. 8, 11, 12, 13, 14, 16 இவைகள் முக்கியமாக சுதேச நூல்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன, கண், காது, தொண்டை ஸர்பவிஷம், நாய்விஷம், முதலியவைகளும் அத்புதமாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. பேதாலஜி, மெடிஸின், என்ற இரண்டு பாகங்களும் வைத்தியர்களுக்கு வெகு முக்கியமானவை. அவைகள் சுதேசநூல்களில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருப்பதுபோல ஆங்கில நூல்களில் சொல்லப்படவில்லை. மேலும் ஆங்கில வைத்தியத்தைக்காட்டிலும் வேறுபட்ட கொள்கைகளும் வேறுபட்ட சிகித்சையும் இருப்பதைக்கொண்டுதான் சுதேச வைத்தியத்திற்கு அரசாங்கத்தின் ஆதரவு வேண்டுமெனக் கோரப்படுகின்றது. அவ்விதமிருக்க ஆங்கில முறைகள் போலல்லாததால் சுதேச முறைகளை ஒப்புக்கொள்ளமுடியாதெனக் கூறப்படுவது நியாயமில்லை. முறைகளுக்குள் தாரதம்யத்தைப் பரீக்ஷிக்காமல் அவர்கள் கையாளும் விதம் விசித்ரமாகவிருக்கின்றது. மிகுந்த புஸ்தகங்கள் இருப்பதைக்கொண்டு ஓர் முறை உயர்ந்ததாகாது. எந்த முறைப்படி சிகித்சைசெய்தால் நோய் நிவிருத்தி அதிகம் ஏற்படுகிறதோ அந்த முறைதான் சிறந்ததெனக் கூறுவது உசிதம். சுதேசமுறைகளில் குணம் அதிகம் காணப்படுகின்றதா அல்லது ஆங்கில முறைகளில் காணப்படுகின்றதாவென்பதை டாக்டர் அவர்களே நிதானிக்கும்படி

வேண்டுகிறோம். ஆங்கில முறைப்படியே சுதேச முறைகளும் இருக்கவேண்டுமென்று நினைத்தால் அப்பொழுது சுதேச முறைகளுக்காகத்தனிப்பாடசாலை எதற்காகவென்பது விளங்கவில்லை. ஹோமியோபதி என்ற ஓர் தனி முறை இருந்துவருகின்றது. அதன் கொள்கைகளும் சிகிச்சையும் முற்றிலும் வேறுபட்டதாகவிருக்கின்றது. ஆங்கிலக்கொள்கையை அம்முறை பரிகசிக்கின்றது. இவ்விதமிருந்தும் ஹோமியோபதி முறை வேறு தேசங்களில் அரசாங்க ஆதரவைப்பெற்றிருக்கின்றது. ஆகவே ஆங்கில முறைகளை யடியொற்றிய வையே சாஸ்திரீயமென்றும் மற்றவை அசாஸ்திரீயமென்றும் நினைப்பது பொருந்தாது. பல ஜனங்கள் போற்றியும் ஆதரித்தும் வரும் முறைகளை குறைத்துப்பேசுவது படித்தவர்களுக்கு அழகல்ல.

வியாதிகளுக்குக் காரணமென மதிக்கப்படும் சில பூச்சிகளைக் கண்டுபிடிப்பதற்கு அனுகூலமான சில கருவிகள் இருப்பதைக் கொண்டு அம்முறை சாஸ்திரீயமென பறை சாற்றுவதும் உசிதமல்ல. ஆங்கில முறைகளில் பூச்சிகளே வியாதிக்குக் காரணமென நிர்ணயிக்கப்பட்டாலும் சுதேசநூல்கள் பூச்சிகளை முக்கிய காரணமென ஒப்புக்கொள்ளவில்லை. வியாதிகளுக்குக் காரணம் திரிதோஷம் என்பது சுதேசவைத்தியக்கொள்கை. ஆகவே சுதேசநூல்களில் பூச்சிகளில் அதிக கவனம் செலுத்தப்படாவிட்டால் திரிதோஷங்களே விவரிக்கப்பட்டிருப்பதைக் காணுகின்றோம். பூச்சிகளால் வியாதி உண்டாகின்றனவா. அல்லது வியாதிகளால் பூச்சிகள் உண்டாகின்றனவா என்ற பிரச்னையில் முதல்கக்ஷி ஆங்கில வைத்தியர்களாலும் பிந்திய கக்ஷி சுதேசவைத்தியர்களாலும் அங்கீகரிக்கப்படுகின்றது.

---

சுதேச வைத்யசபையின் ஆதரவில் 16-4-39-ல் காக்காத்தோப்புத் தெரு சூரியநாராயண சாஸ்திரியார் பாடசாலையில் A. R. ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீமான் A. V. சுப்பிரமணிய ஐய்யர் அவர்கள் B.A., L.T, தலைமையில் சுதேச வைத்தியர்களின் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது அச்சமயம் கரூர் டாக்டர் ஸ்ரீமான் A. K. ராகவேந்திராசார் அவர்கள் உன்மாதமும் அதன் சிகித்சையும் என்பதைப்பற்றி விரிவாக உபன்யாசம் செய்தார். பல வைத்தியர்களும் அவ்விஷயமாகப் பேசினார்கள்.

T. S. சுப்ரமண்யம், காரியதரிசி.

26. கூச்மாண்ட கண்டம்: சாம்பல் பூசினி நல்லபழுத்தபழமாக எடுத்து தோலும் உள்விதையும் நீக்கிப் பொடியாகக் கொப்பரைத் துருவியால் பொடிசெய்து தோலா 400, எடுத்து அடுப்பில் இலேசாக வேகவைத்து எடுத்துச் சாரைப்பிழிந்து சக்கையை ஓர் வாய கந்த தாமிர பாத்திரத்தில் போட்டு பசும்நெய் சின்னபடி 1 விட்டு நன்ருக வதக்கி பொன்னிறமாகும் சமயம்பார்த்து முன் ரசத்தையும் ஜீனிசர்க்கரை தோலா 400-ம் சேர்த்துப் பாகுபதத்தில் திப்பிலி, சுக்கு, சீரகம், வகைக்குத்தோலா 8, கருவாப்பட்டை, ஏலம், பச்சிலை, மிளகு, மல்லிவிதை, வகைக்குத் தோலா 2, இவைகளை இடித்துப்பொடிசெய்து போட்டு நன்ருகக்கிளரி தேன் தோலா 32 விட்டு நன்ருகக்கலந்து ஜாடியில் பத்திரப்படுத்தவும். வேளைக்கு 1 தோலா முதல் 2 தோலாவரை உபயோகிக்கவும். ரக்த பித்தம் தீரும். குறிப்பு:—நல்ல பருமனுகவும் கனமாகவும் முதிர்ந்ததாகவும் உள்ள பூசினிக்காயை பங்குனி, சித்திரை மாதத்தில் சம்பாதிக்கவேண்டும். கையால் தூக்கினல் மிகுந்த பளுவாக இருக்கவேண்டும். அதை மேல் தோல் உள்ளிருக்கும் சாரமற்ற பாகம் இவைகளை நீக்கிவிடவும். நடுவிலுள்ள சதைப்பற்றுன பாகம் மாத்திரம் எடுத்துக்கொள்ளவும். தேங்காய்துருவியைக்கொண்டு தேங்காய்த்தூள்போல செய்துகொள்ளவும். அச்சமயம் வெளி வரும் ரசத்தை பத்திரப்படுத்தவும். பிறகு அந்தத் தூளை ஓர் பாத்திரத்தில் போட்டு அடுப்பேற்றி வேகவைக்கவும். அரைவேக்காடு ஆனவுடன் இறக்கி ரசத்தைப்பிழிந்து முன் ரசத்துடன் இந்த ரசத்தையும் சேர்த்துக்கொள்ளவும். பிறகு ஓர் தாமிர பாத்திரம் (அது கிடைக்காவிட்டால் இரும்புச்சட்டி) எடுத்து அடுப்பில் வைத்து அதில் அளவுப்படி நெய்யைவிட்டு பூசினித்தூளையும் போட்டுப் பொன்னிறமாக வதக்கவேண்டும். பிறகு அந்தத்தூளை வேறு பாத்திரத்தில் வைத்துக்கொண்டு முன் பாத்திரத்தில் முன் ரசத்தைவிட்டு சர்க்கரையையும் சேர்த்துப் பாகுவைத்துப் பதத்தில் அந்த பூசினித்தூளையும் மற்ற கடைச்சரக்குத்தூளையும் போட்டு நன்ருகக்கிளரி ஆறின பிறகு தேன்சேர்த்துக் கலந்து கொள்ளவும். அளவு அதிகமாகச்சாப்பிட்டால்தான் குணம் கொடுக்கும். ஆகையால் இரண்டுதோலா அளவே ஒவ்வொரு வேளைகளும் உபயோகிப்பது நல்லது.

27. வாஸா கூச்மாண்ட கண்டம்:—முன்போல பூசினிக்காய் தூள் தோலா 200, நெய் சின்னப்படி 1, ஜீனி தோலா 400. ஆடாதோடைகஷாயம், சின்னப்படி 8, இவைகளை ஓர் இரும்புவாணலியில் போட்டு பாகுவரும் சமயத்தில் கோரைக்கிழங்கு, நெல்லி வற்றல், கடுக்காய், சிருதேக்கு, கருவாப்பட்டை, ஏலம், பச்சிலை, வகைக்குத்தோலா 1, ஏலாவாலுகம், சுக்கு, மல்லிவிதை, மிளகு, வகைக்குத்தோலா 4, திப்பிலி தோலா 16, இவைகளைப் பொடி செய்து போட்டுக்கிளரி ஆறின பிறகு தேன் 32 தோலா விட்டுக் கலந்து ஜாடியில் பத்திரப்படுத்தவும், வேளைக்கு அரைத்தோலா முதல் 1 தோலா சாப்பிடவும். குறிப்பு.—ஆடாதோடை கஷாயம் செய்யும் விதம்.—ஆடாதோடை தோலா 256 இடித்துப்பானையில் போட்டு ஜலம் சின்னப்படி 32 விட்டு நாலில் ஒன்றாக வற்றவைக்கவும். ஏலாவாலுகம் என்ற சரக்கு நமது தேசத்தில் கிடைக்காது. அதற்குப் பதில் ஏலத்தைச் சேர்த்துக்கொள்ளவும்.

28. கண்டகாத்யலௌஹம்:—தண்ணீர்விட்டான் கிழங்கு, சீந்திற்கொடி, ஆடாதோடை, கொட்டைக்கரந்தை, குருந்தொட்டி வேர், நிலப்பனைக்கிழங்கு, கருங்காலி, திரிபலைத்தோல், சிருதேக்கு, கோஷ்டம், வகைக்குத்தோலா 20, இவைகளை யிடித்து ஓர் பானையில் போட்டு ஜலம் சின்னப்படி 32 விட்டு எட்டில் ஒன்றாக வற்ற வைத்து அதை வடிகட்டி ஓர் இரும்புச்சட்டியில்விட்டு அதில் அயக்காந்த சிந்தூரம் 48 தோலா, ஜீனி தோலா 48 போட்டு வற்ற வைத்துப்பிறகு நெய் தோலா 64 விட்டு அதில் கல்மதம், கருவாப்பட்டை, கர்காடகசிருங்கி, வாய்விளங்கம், திப்பிலி, சுக்கு, ஜாதிக்காய், இவை வகைக்குத் தோலா 4, திரிபலைத்தோல் மல்லிவிதை பச்சிலை, மிளகு, சிருநாகப்பூ, இவை வகைக்குத்தோலா 2, இடித்துப்பொடிசெய்து அதில் போட்டு தேன்தோலா 64 விட்டு நன்றாகக்கலந்து பத்திரப்படுத்தவும். வேளைக்கு 3 குன்றுமணியிடை வீதம் ஆரம்பித்து கொஞ்சங்கொஞ்சமாகக் கால்தோலா வரை உபயோகிக்கவும். அநுபானம் பால் முதலியவை. குறிப்பு:—அயக்காந்தம் அல்லது அயத்தை மனோசிலை அல்லது சுவர்ண மாக்ஷிகம் சேர்த்து சிந்தூரம் செய்துகொள்ளவேண்டும். இது ரக்தத்தை நிறுத்தும் உயர்ந்த மருந்து.

29. உசீராஸவம்:—விலாமிச்சம்வேர், வெட்டிவேர், தாமரைக் கிழங்கு, குமிழம்பழம், கருநெய்தல்கிழங்கு, ஞாழல், பதிமுகம், வெள்ளி லோத்திப்பட்டை, மஞ்சிஷ்டி, செந்தொட்டிவேர், மலை தாங்கிவேர், நிலவேம்பு, ஆல், அத்தி, பூலாங்கிழங்கு, பர்பாடகம், வெள்ளைத்தாமரைக்கிழங்கு, பேய்ப்புடல், மந்தாரைப்பட்டை, நாவல்பட்டை, இலவம்பிசின், இவை வகைக்குத்தோலா 4, இவைகளை நன்றாக இடித்துப் பொடிசெய்து ஓர் பானையில் போட்டு அதில் திராக்ஷை தோலா 100 சேர்த்து, அதில் காட்டாத்திப்பூ பொடிசெய்து 64 தோலா போட்டு சுத்தஜலம் சின்னப்படியில் 64 விட்டு சர்க்கரை தோலா 400, தேன் தோலா 400-ம் அதில் விட்டு பானையின் வாய்க்கு மொத்துப்போட்டு ஒருமாதம் வைத்திருந்து பிறகு தெளிவாக வடிகட்டி ஜாடியில் பத்திரப்படுத்தவும், அளவு—வேளைக்கு அரைமுதல் ஒரு அவுன்சு.

30. வாசாகண்டம்:—ஆடாதோடை தோலா 400 இடித்து ஓர் பானையில் போட்டு சின்னபடியில் 50 படி சுத்த ஜலம்விட்டு அடுப்பேற்றி நாலில் ஒன்றாக வற்றவைத்து வடிகட்டி அந்தக்கஷாயத்தை ஓர் இரும்புச்சட்டியில் விட்டு அதில் சர்க்கரை தோலா 400 போட்டு நன்றாகக்கரைந்த பிறகு அதில் கடுக்காய்த்தூள் 256 தோலா, திப்பிலிப்பொடி 8 தோலா, இவைகளைப்போட்டு அடுப்பேற்றிக் கிளரி இறக்கி ஆறினபிறகு தேன் தோலா 16, சேர்த்துப்பிறகு அதில் கருவாப்பட்டை, பச்சிலை ஏலம், சிருநாகப்பூ, இவை வகைக்குத்தோலா 1 இடித்துப்பொடிசெய்து போட்டு நன்றாகக்கலந்து ஜாடியில் பத்திரப்படுத்தி வேளைக்கு அரைத்தோலா முதல் 1 தோலா வரை சாப்பிடவும். ரக்தபித்தம் தீரும். குறிப்பு:—ஆடாதோடைபச்சைவேராக எடுத்து நன்றாக நொறுக்கிக் கஷாயம் செய்யவேண்டும். பாகு இளப்பதமாகவிருக்கும்பொழுதே சூர்ணங்களைப்போட்டுக்கிளரவேண்டும். இவ்விடத்தில் சர்க்கரை குறைவான அளவில் சொல்லப்பட்டிருப்பதால் அவ்விதம் கவனித்து பதத்தில் பொடிகளைப்போட்டுக் கிளரவேண்டும்.

31. பேயத்திரஸம்:—பேயத்திமரத்தின் பச்சைக்காயை இடித்து அரைமுதல் ஒரு அவுன்சு ரசத்தை 5, 6 துளி தேன்

சேர்த்து மூன்றுநாள் அதாவது 6 வேளை சாப்பிட ரக்தபித்தம் தீரும். பத்தியம் பால் கஞ்சி. இது மிகவும் அனுபவத்தில் கை கண்டது. குறிப்பு:—பேயத்தி என்பது சாமான்யமாக எங்கும் காணக்கூடிய மரம். அதன் காய்களைப் பச்சையாகப் புதிதாக எடுத்துக்கொள்ளவேண்டும். காய்ந்த காய்களுக்கு நல்லகுணம் இருப்பதில்லை. தீராத காலங்களில் காய்ந்த காய்களைக் கஷாயம்செய்து கொள்ளலாம்.

## இருமல்—காசம்—Bronchitis—Cough.

32. **ஸ்ரீ சந்திராமிருத ரஸம்:**—சுத்திசெய்த ரசம் தோலா 2, சுத்திசெய்த கந்தகம் தோலா 2, அயச்சிந்தூரம் தோலா 2, சுத்திசெய்த வெங்காரம் தோலா 8, மிளகுபொடி தோலா 4, கடுக்காய்ப் பொடி, தான்றிக்காய்பொடி, நெல்லிவற்றல் பொடி, சுக்குப்பொடி, மிளகுபொடி, திப்பிலிப்பொடி, செவ்வியம்பொடி, மல்லிவிதைப் பொடி, ஜீரகம்பொடி, இந்துப்புப்பொடி, ஆகிய இவை வகைக்குத் தோலா 1, இவைகளைக் கல்வத்திலிட்டு வேண்டியவளவு வெள்ளாட்டுப்பால்விட்டு அரைத்து 9 குன்றுமணியளவுஉருண்டையாக உருட்டி மாத்திரைகளை வெய்யிலில் காயவைத்து சீசாவில் பத்திரப்படுத்தவும். வேளைக்கு 1 மாத்திரையைத் தேன் அல்லது தகுந்த அநுபானத்தில் சாப்பிடவும். குறிப்பு:—இவ்விடத்திலும் இதுபோன்ற மற்ற இடங்களிலும் ரசத்தைச் சுத்திசெய்யும்விதமாவது—பாதரசம் (இது வே ரசமெனவும் அழைக்கப்படும்) கடையில் 6 தோலாவளவு வாங்கி அதை அப்படியே கல்வத்திலிட்டு குமரி (இதுவே கற்றாழை யென்றும் சோற்றுக் கற்றாழை யெனவும் அழைக்கப்படும்) சாறுவிட்டு (ரசம் முழுகும்படிவிட்டு) நன்றாக அரைக்கவும். இவ்விதம் மூன்றுமணிகாலம் கைவிடாமல் அரைக்கவும். கற்றாழை ரசம் எடுப்பதற்கு முறைகள் வேறு இருந்தாலும் இவ்விடத்தில் கற்றாழை மடலைவிலக்கி உள்ளிருக்கும் சோறுபாகத்தை (வழவழப்பாக இருக்கும் பாகத்தை கத்தியால் வழித்து அப்படியே போட்டுக்கொள்ளவும். இவ்விதம் அரைத்த பிறகு அந்தபாத ரசத்தை மாத்திரம் தனிப்படுத்தி எடுக்கவேண்டும். அதற்குப்பலவழிகள் இருந்தபோதிலும் இவ்விடத்தில் அடி

யில்கண்டவிதமாகச் செய்யவும். ஓர் வஸ்திரத்தில் அந்தச் சாமான் முழுவதையும் போட்டு கையால் பிசையாமல் அப்படியேகட்டி கொஞ்சகாலம் வைத்திருந்தால் கற்ருழைச்சார் தனியாக வந்து விடும். வஸ்திரத்திலிருக்கும் கற்ருழை பாகம் சுவல்பம் கலந்திருக் கும் பாதரசத்தை மறுபடியும் கல்வத்திலிட்டு அந்த பாதரசத்தின் அளவு அதாவது 6 தோலா யிடை நன்ருக வெந்த செங்கல்பொடி யைப்போட்டு முன்போல அரைக்கவும். அரைத்த பிறகு வெய்யி லில் நன்ருகக் காயவைதததுப் பிறகு அந்த பாதரசத்தைத் தனியா கப்பிரிக்கவேண்டும். அதற்கு வழியாவது—ஓர் மெல்லிய வஸ்தி ரத்தில் அந்த சாமான் முழுவதையும் கொட்டிக் கையால்பிழிந்தால் பாதரசம் துணியின் சிறிய துவாரம் வழியாகக்கீழே விழும். ஆக வே அவ்விதம் செய்யும்பொழுது அடியில் கல்வம் முதலான பாத் திரங்களை வைத்து அதில் பிழியவேண்டும். பிறகு அதை மறு படியும் கல்வத்தில் போட்டு கொடுவேலிப்பொடி சமயிடைசேர்த்து ஜலம்விடாமல் முன்போல அரைக்கவும். மறுபடியும் முன்போல வேறுபடுத்தவும். இவ்விதம் செய்தால் ரசத்திற்கு சுத்தியாம். கந்த கம் சுத்திசெய்யும் விதமாவது—கந்தகத்தைக் குருணைபோல பொடிசெய்து கரிப்பான் (கரிசேலங்கண்ணி என்று இதற்கு சில இடங்களில் சொல்லுவார்கள்) ரசம் எடுத்து கந்தகப்பொடி முழு கும்படி ஓர் இரும்பு பாத்திரத்தில் விடவும். இவ்விதம் மூன்று நாள் செய்தபிறகு ஓர் இரும்புக்கரண்டியைத் தணலில் வைத்து அதில் அந்த கந்தகப்பொடியை (வெய்யலில் காயவைத்ததை) ப்போட்டு அது நெய்மாதிரி உருகும்போது உடனே அதைகரிப் பான் சாற்றில் கவிழ்க்கவும். அதிகம் உருகிவிட்டால் மறுபடியும் அது கெட்டியாகாது. கெட்டியாகப்போகும். கொஞ்சம் உருக ஆரம்பித்த உடனே ஜாக்கிரதையாகக் கரிப்பான் ரசத்தில் சாய்த்து விடவும். பிறது அதை வெய்யிலில் உலர்த்திப் பொடி செய்து கொள்ளவும். இது கந்தகசுத்தி. ரசத்திற்கும் கந்தகத்திற்கும் மற்றும் பல சுத்திகள் உண்டு. அவை சித்தர் முறை என்ற புஸ்த கத்தில் சொல்லப்படும். இதுபோன்ற ரசகந்தகங்கள் சேரும் மருந்துகளில் இந்த சுத்தியே போதுமானது. வெங்காரத்தைப் பொடிசெய்து ஓர் மண் ஓட்டில்வைத்து அடுப்பேற்றி சிறுதீயிட்டு

2/0/72

எரிக்க அது உருகிக்கட்டும். இது வெங்கார சுத்தி. அயச்சிந்தூரம் பலவிதமாகச் சொல்லப்படுகின்றது. எவ்விதமாகத்தயார் செய்திருந்தாலும் இப்மருந்தில் சேர்க்கலாம். மிளகு முதல் இந்துப்புவரையிலுமுள்ள சரக்குகளை அளவுப்படி எடுத்துச்சேர்த்து ஒரேதடவையில் இடித்து வஸ்திரகாயம் செய்துகொள்ளலாம். வெள்ளாட்டுப்பாலை வடிகட்டிக்கொள்ளவும். பாலில் ஆட்டுமயிர் சேர்ந்திருக்கும். இது எல்லாவித இருமல்களிலும் குணம்கொடுக்கும். வரட்டு இருமலில் மிகுந்த நன்மை செய்யும். க்ஷய வியாதியில் இருமலுக்கும் கொடுக்கலாம்.

33. பார்ங்கீகஷாயம்:—சிறுதேக்கு, கட்பலம், சீமை நிலவேம்பு, வெட்டிவேர், கோரைக்கிழங்கு, கர்காடகசிருங்கி, வசம்பு, கடுக்காய், சுக்கு, தேவதாரு, இவைகளைக் கஷாயம்செய்து அதில் பெருங்காயமும் தேனும் சேர்த்துச்சாப்பிட இருமல், க்ஷயம், ஆஸ்த்மா தீரும். குறிப்பு—கட்பலம் என்பது வடதேசத்துச் சரக்கு, சீமை நிலவேப்பு கிடைக்காவிட்டால் சாதாரண நிலவேம்பை உபயோகிக்கலாம். சரக்குகளை சமயிடையாக எடுத்து இடித்துக்கொண்டு அந்தப்பொடியில் இரண்டு தோலா எடுத்து ஓர் மண் சட்டியில்போட்டு சின்னப்படியில் அரைப்படி ஜலம்விட்டு அரைக் கால்படியாக வற்றவைத்து அதை வடிகட்டி வீசம்தோலா பெருங்காயத்தையும் 5, 6 துளி தேனையும் சேர்த்து ஒரே வேளையில் சாப்பிடவும். பெருங்காயம் என்பது பால்பெருங்காயம். பெருங்காயம் பிடிக்காதவர்கள் தேனைமாத்திரம் சேர்த்து சாப்பிடவேண்டும். இவ்விதம் ஒவ்வொரு வேளைக்கும் புதிது புதிதாகக்கஷாயம் செய்துகொள்வது நல்லது.

34. யவக்ஷாரகுடீ:யவக்ஷாரம் தோலா 1, மிளகு தோலா 2. திப்பிலி 2 தோலா, மாதளைத்தோல் தோலா 4, இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து ஷை பொடியில் சர்க்கரை தோலா 16 சேர்த்து மாத்திரையாக உருட்டிச்சாப்பிட இருமல் தீரும். குறிப்பு மாதளைத்தோலுக்குப்பதிலாக புளிப்புமாதளை விதையைப்போட்டுக்கொள்ளுப்படி வியாக்யானங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. புளிப்புமாதளை விதையைப்பிழிந்து, ரசத்தை நீக்கி விதையை

மாத்திரம் வெய்யிலில் காயப்போட்டு எடுத்துக்கொள்ளவேண்டியது. இதுதான் சரியான முறை. அவ்விதை கிடைக்காதகாலங்களில் சாதாரண மாதளேத்தோலே உபயோகிக்கலாம். இவ்விதமும் நாம் உபயோகித்து குணம் கண்டிருக்கிறோம். இந்தவிதமும் சில கிரந்தகர்த்தாக்களால் சொல்லப்பட்டிருக்கின்றது. ஓர் இரும்பு சட்டியில் சர்க்கரையைப்பாகுவைத்து அதில் பொடியைப்போட்டு கிளரி கொட்டைப்பாக்களவாக உருட்டிவிடவும். அவசியமானல் வெய்யிலிலும் வைத்துக்கொள்ளலாம். ஓர் உருண்டையை வாயில் கற்கண்டுபோல அடக்கிக்கொண்டு ரசத்தை விழுங்கவும். ஆங்கிலத்தில் உள்ள Peps முதலிய மருந்துகளேவிட மிகுந்த நன்மைசெய்யும்.

35. அர்ககுடீ:-எருக்கம்பூவின் மொக்கு, மிளகு, இவைகளேச் சமயிடையாக எடுத்து நன்ருக அரைத்து சுண்டைக்காயளவு உருண்டையாக உருட்டி நிழலில உலர்த்திப் பிறகு வெய்யிலில் உலர்த்தி சீசாவில் பத்திரப்படுத்தவும். வேளேக்கு 1 மாத்திரை முதல் 2 மாத்திரை வரையில் வாயில் போட்டுக்கொண்டு வென்னீர் ஜலம் அல்லது தகுந்த அனுபானததில் சாப்பிட காஸம் தீரும்.குறிப்பு எருக்கில் இருவகை யுண்டு. அதில் எதாகவிருந்தாலும் பாதகமில்லே. குவிந்திருக்கும் மொக்குகளே மாத்திரம் பச்சையாக எடுத்துக்கொள்ளவும். காய்ந்த மொக்குகளாகவிருந்தால் அப்பொழுது பொடிசெய்து பிறகு தேனேவிட்டுப்பிசைந்து மாத்திரை உருட்டவும். பச்சையாகவிருந்தால் கொஞ்சம் பச்சைஜலம்விட்டு மாத்திரை உருட்டவும். இது ஓர் பைராகி முறை.

36. ஸூர்தவடீ:—சுத்திசெய்த ரசம் பாகம் 1, சுத்திசெய்த கந்தகம் பாகம் 2, திப்பிலிப்பொடி பாகம் 3, கடுக்காய்த்தோல் பொடி பாகம் 4, தான்றிக்காய்ததோல் பொடி பாகம் 5, ஆடாதோடையிலேப்பொடி பாகம் 6, சிருதேக்குப்பொடி பாகம் 7, இவைகளே ஒன்றுசேர்த்து கருவேலம்பட்டைக் கஷாயத்தால் அரைத்து சுண்டைக்காயளவு உருண்டைசெய்து உலர்த்திப் பத்திரப்படுத்தவும். வேளேக்கு 1 முதல் 3 மாத்திரைப் பொடிசெய்து தேன் அல்லது தகுந்த அனுபானத்தில் சாப்பிட இருமல் தீரும்.

குறிப்பு:—முன்போல ரசத்தையும் கந்தகத்தையும் சுத்திசெய்து கொள்ளவும். மற்ற கடைச்சரக்குகளை ஒன்றுசேர்த்து இடித்து வஸ்திரகாயம் செய்துகொள்ளவும். கல்வத்தில் கந்தகத்தை முத லில் போட்டு நன்ருகப்பொடிசெய்துகொண்டு பிறகு ரசத்தைச் சேர்த்து நன்ருகக்கலந்து அரைக்கவும். பிறகு மற்றப்பொடிகளை யும் சேர்த்து நன்ருகக் கலந்தபிறகு கருவேலம்பட்டைக் கஷாயத் தை வேண்டியவளவு விட்டு அரைத்து உருண்டைசெய்து வெய்யி லில் உலர்த்திக்கொள்ளவும். இருமல்களுக்கு நல்ல மருந்து.

37. தாமிரபஸ்மம்:—தாமிரத்தகட்டை நெருப்பில் காய்ச்சிச் சுத்தத்தண்ணீரில் மூன்றுதடவை தோய்க்கவும். பிறகு முன்போல வே காய்ச்சி நொச்சித்தழைச் சாற்றில் மூன்றுதடவை தோய்க் கவும். பிறகு ஷை தகட்டிற்கு சமயிடை சாதாரண உப்பு எடுத்து ஓர் அகலில் பாதி உப்பைக் கீழே பரப்பி தகட்டை அதன்மேல் வைத்து மீதி உப்பைத் தகட்டின்மேல் பரப்பி மேல் அகல்மூடி வாய்க்குச்சிலைமண் செய்து காயவைத்து கஜபுடமிடவும். ஆறின பிறகு தகட்டை எடுத்துப் பொடிசெய்து சீசாவில்பத்திரப்படுத்த வும். பணவிடை தினம் காலை மாலைகளில் தேன் முதலிய அனுபா னங்களில் கொள்ள காசம் தீரும். குறிப்பு:—வர்ணத்தகடு அல் லது அதுபோல மெல்லிய தகடாக எடுத்துக்கொள்ளவேண்டும். நொச்சித்தழையை இடித்துச்சார்பிழிந்து வைத்துக்கொள்ளவேண் டும். சாதாரணமாக வழக்கத்திலுள்ள வீட்டு உப்பை (கல்லுப் பை)ப் பொடிசெய்து பாதியைக் கீழேபரப்பி அதாவது தகடு அளவு பரப்பி அதன்மேல் தகட்டைவைத்து மேலுக்கும்உப்பைப் பரப்பி அசையாமல் சிலைமண்செய்து புடமிடவும். கஜபுடத்திற்கு சற்று தணிவாக விருந்தாலும் பாதகமில்லை. ஒரே புடம் போது மானது. உப்பு பொரிந்து தனியாகப் போய்விடும். தகடு கறுப்பு நிறமாக வெட்டையாகும். பொடிசெய்துகொள்ளவும். வாந்தி பேதியாகாது. தாராளமாக உபயோகிக்கலாம். இது ஓர் பைராகி முறை.

38. சந்திராமிருத லௌஹம்:-திரிகடு, திரிபலை, மல்லிவிதை, செவ்வியம், ஜீரகம், இந்துப்பு, இவை சமயிடை, அதாவது வகைக்

குத்தோலா 1, அயச்சிந்தூரம் தோலா 10, இவைகளைக்கல்வத்தில் போட்டு ஆடாதோடை ரசம் வேண்டியவளவு விட்டு அரைத்து 9 குன்றுமணியிடை மாத்திரையாக உருட்டி வெய்யிலில் காய வைத்துச் சீசாவில் பத்திரப்படுத்தவும். வேளைக்கு 1 மாத்திரை தேன் முதலிய அனுபானங்களில் கொள்ள இருமல் தீரும். குறிப்பு அயச்சிந்தூரத்தைப் பலவிதமாகச் செய்யலாம்- இவ்விடத்தில் மனோசிலையைச் சேர்த்துப்புடம்போட்டு பஸ்மம் செய்த அயத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். திரிகடு முதலிய கடைச்சரக்கு பத்தையும் இடித்து வஸ்திரகாயம் செய்து அந்தத்தூளைக் கல்வத்தில் போட்டு அயச்சிந்தூரத்தையும் சேர்த்து அரைக்கவும்.

39 **காஸலக்ஷ்மீ விலாஸ ரஸம்,**—வெள்வங்கபஸ்மம், காந்த சிந்தூரம், அப்பிரகசிந்தூரம், தாம்பிரபஸ்மம், வெங்கலபஸ்மம், சுத்திசெய்தரசம், சுத்திசெய்தகந்தகம், சுத்திசெய்ததாளகம், சுத்திசெய்தமனோசிலை, சுத்திசெய்தபால்துத்தம், (தாளகம், மனோசிலை, பால்துத்தம், இம்மூன்றையும் பஸ்மமாகச்செய்து சேர்ப்பது மிகவும் நல்லது) இவைகளைத் தனித்தனி 8 தோலா எடுத்து கல்வத்திலிட்டு அரைத்து ஒருத்தலைகரிப்பான் ரசத்தாலும் கொள் கஷாயத்தாலும் தனித்தனி மூன்றுநாள் பாவனை செய்து அதில் ஏலம், ஜாதிக்காய், கருவாப்பட்டை, கிராம்பு, ஓமம், ஜீரகம், திரிகடு, திரிபலை, தகரை, பெரிய லவங்கப்பட்டை, மூங்கிலுப்பு, இவைகளைத் தனித்தனி இரண்டு தோலா எடுத்துப்பொடி செய்து முன் மருந்தில் சேர்த்து ஒருத்தலைகையாந்தகரைச் சாற்றாலும் கொள்கஷாயத்தாலும் அரைத்துக்கடலைப்பிரமாணம் குளிகை செய்து வெய்யிலிலுலர்த்திச் சீசாவில் பத்திரப்படுத்தவும். வேளைக்கு 1 மாத்திரை வீதம் குளிர்ந்த ஜலத்தில் சாப்பிடவும். இருமல் தீரும். குறிப்பு.—முதலில் கல்வத்தில் கந்தகத்தைப் போட்டு அரைத்துப் பொடிசெய்து பிறகு ரசத்தைச் சேர்த்து மர்தித்து பிறகு மற்ற பஸ்மங்களையும் சேர்த்துக்கொள்ளவும். இவை முழுகுமளவு முதலில் கையாந்தகரைச்சார் விடவும். இவ்விதம்மூன்று நாள் செய்து பிறகு கொள் கஷாயத்தை முன்போல விடவும். மூன்றுநாள் ஜலம் வற்றவற்ற விடவும். பிறகு கடைச்சரக்குகளை இடித்து வஸ்திரகாயம் செய்து அதோடு கலக்கவும். மாத்திரை

உருட்டுவதற்கு வேண்டியவளவு கொள்கஷாயம் அல்லது கையாந்தகரை (கரிப்பான்) ரசத்தைவிட்டுக்கொண்டு மாத்திரை உருட்டவும்.

40. சிருங்கார அப்ரம்:—கிருஷ்ணப்பிரக சிந்தூரம் தோலா 8, பச்சைக்கர்பூரம், ஜாதிபத்திரி, வெட்டிவேர், யானைத்திப்பிலி, சன்னலவங்கப்பட்டை, கிராம்பு, சடாமஞ்சி, தாளிசபத்திரி, பச்சிலை, சிருநாகப்பூ. கோஷ்டம், காட்டாத்திப்பூ, இவை வகைக்குத் தோலா $\frac{1}{4}$, கடுக்காய், நெல்லிவற்றல், தான்றிககாய், திரிகடு, இவை வகைக்குத்தோலா $\frac{1}{8}$, ஏலம், ஜாதிக்காய், இவை வகைக்குத்தோலா $\frac{1}{2}$, சுத்திசெய்த கந்தகம் தோலா 1, சுத்திசெய்த ரசம் தோலா $\frac{1}{2}$, இவைகளைச் சுத்தஜலம் விட்டு அரைத்து கடலைப்பிரமாணம் குளிகைசெய்து காயவைத்துச் சீசாவில் பத்திரப்படுத்தவும். காலையில் 4 மாத்திரைகளை இஞ்சிரசம், வெற்றிலைரசம் அனுபானத்தில் சாப்பிடவும். இருமல் தீரும். குறிப்பு:-முதலில் கந்தகத்தை கல்வத்திவிட்டு அரைத்துப்பிறகு ரசத்தைச்சேர்த்து மர்த்திக்கவும். பிறகு அப்பிரகசிந்தூரத்தைச் சேர்த்து அரைக்கவும். பச்சைக்கர்பூரம் நீங்கலாக மற்றச்சரக்குகளை இடித்து வஸ்திரகாயம் செய்து அந்தப்பொடியையும் பச்சைக்கர்பூரத்தையும் சேர்த்து எல்லாவற்றையும் சேர்த்து ஜலம்விட்டு அரைத்து மாத்திரை உருட்டவும்.

41. லாக்ஷாதி சூர்ணம்:—கொம்பரக்கு, அதிமதுரம், பத்மகாஷ்டம், மிளகு, உலர்ந்த கண்டங்கத்திரிப்பழம் இவைகளைச் சமயிடையாக எடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு அந்தப்பொடியில் கால்தோலா முதல் அரைத்தோலா வரை தேன் நெய் ஆகிய இவைகளில் குழைத்துத் தினம் இருவேளை சாப்பிட க்ஷயவியாதியில் காணும் இருமல் தீரும். குறிப்பு:—கொம்பரக்கு என்பது கடையில் கிடைக்கும் சரக்கு. அதை உடைத்து நடுவிலுள்ள குச்சியை விலக்கிவிடவும். பத்மகாஷ்டம் என்பது வடதேசச்சரக்கு. மலையாளத்தில் பதிமுகம் என ஓர் சரக்கு கிடைக்கின்றது. அதற்கும் வடதேச சரக்குக்கும் வித்தியாசமிருப்பதால் வடதேசச்சரக்கை வாங்கிக்கொள்ளுவது நல்லது. கண்டங்கத்

திரிப்பழம் நல்ல பழுத்த பழமாகப் பொறுக்கி பழத்தின்மேலுள்ள முள்ளில்லாமல் செய்து இடித்து வெய்யிலில் காயவைத்து எடுத்துக்கொள்ளவேண்டும்.

42. லவங்காதிவடீ:—கிராம்பு, மிளகு, தான்றித்தோல், வகைக்குப்பலம் 1, கருங்காலிக்கட்டை பலம் 3 இவைகளை யிடித்து வஸ்திரகாயம் செய்து கருவேலம்பட்டைக் கஷாயத்தின் அனுபானத்தில் சாப்பிட காசம், ஆஸ்த்மா இவை தீரும். குறிப்பு—கருங்காலிக்கட்டையின் வைரபாகததை இழைத்துத்தூள் எடுத்து இடித்துவஸ்திரகாயம் செய்துகொள்ளவும். கருவேலம்பட்டையைப்பச்சையாக எடுத்து அரைப்பலம் ஓர் புதுச்சட்டியில் போட்டு 8 பலம் ஜலம்விட்டு இரண்டு பலமாக வற்றவைத்து அனுபானமாகக் கொள்ளவும், வேளைக்குக் கால்தோலா முதல் அரைத்தோலா வரை தேனில் குழைத்து சாப்பிட்டபிறகு அனுபானம் சேவிக்கவும். கைகண்டமருந்து. ஆஸ்த்மாவுக்கும் நல்லது.

43. கதிராதிகுடீ:—கருங்காலிக்கட்டை, கோஷ்டம், கர்காடக சிருங்கி, கட்பலம், சிருதேக்கு, கடுக்காய்த்தோல், கிராம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, அதிவிடயம், ஓமம், செந்தொட்டிவேர், சீந்திற் கொடிக்கண்டங்கத்திரிவேர், முள்ளிவேர், தான்றித்தோல், வகைக்குத்தோலா 2, கருங்காலிக்கட்டை தோலா 34 இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து மாதளைரசம், கண்டங்கத்திரி ரசம், கருங்காலிக்கட்டைக் கஷாயம், இஞ்சிரசம், கருவேலம்பட்டைக் கஷாயம், ஆடாதோடைக்கஷாயம், இவைகளால் வகைக்கு ஏழு பாவனைசெய்து அரைத்தோலா வளவு உருட்டிக் காயவைத்து பத்திரப்படுத்தவும். வேளைக்கு 1 மாத்திரையைத் தேனில் குழைத்துச்சாப்பிட்டுப் பிறகு ஏதாவது தகுந்த அனுபானம் சாப்பிடவும்.

## சுவாசம்—Asthma—Phneumonia—Broncho—Phneumonia.

44. பார்ங்கீகுடம்:—சிருதேக்குத் தோலா 400, தசமூலம் வகைக்குத்தோலா 40, கடுக்காய் 100, இவைகளைக்கடுக்காய் நீங்க

லாக இடித்துப் பானையில்போட்டு கடுக்காயையும் அப்படியே போட்டு ஜலம் சின்னப்படியால் 50 விட்டு அடுப்பேற்றி நாலில் ஒன்றாக வற்றவைத்து வடிகட்டிக் கஷாயத்தை ஓர் இரும்பு வாணையில் விட்டு அந்த வேகவைத்த கடுக்காயையும் போட்டு 400 தோலா சர்க்கரை சேர்த்துப் பாகுபதம் வந்தவுடன் சுக்கு, திப்பிலி, மிளகு, கருவாப்பட்டை, பச்சிலை, ஏலம், வகைக்குத்தோலா 4, யவக்ஷாரம் தோலா 2, ஆகிய இவைகளைப் பொடிசெய்து போட்டு ஆறின பிறகு, தேன் தோலா 24 விட்டு நன்றாகக்கிளறி பத்திரப்படுத்தவும். வேளைக்கு ஒரு கடுக்காயும் லேகியம் 1 தோலாவும் சாப்பிடவும். குறிப்பு:—கஷாயம் எரியும்பொழுது கடுக்காயும் சேர்ந்து இருக்கவேண்டும். கஷாயத்தை வடிகட்டின பிறகு கடுக்காயைத் தூசியில்லாமல் துடைத்து எடுத்துக்கொள்ளவும். அந்தக்கடுக்காயை முழுசாகப்பாகில் போடும்படி நூலில் கூறப்பட்டிருந்தாலும் அந்தக்கடுக்காய் முழுவதையும் இரண்டாக நறுக்கிப்போடுவது சம்பிரதாயம். கடுக்காயைச் சாப்பிட்டுப் பிறகு அந்த சக்கையை உமிழ்ந்துவிட்டு லேகியத்தை உடனே சாப்பிடவும். ஆஸ்த்மாவுக்கு நல்லது.

45. கனகாசவம்:—ஊமத்தைச்செடி சமூலம் இடித்துத்தோலா 15 ஆடாதோடைவேர் தோலா 16, அதிமதுரம், திப்பிலி, கண்டங்கத்திரிவேர், சிறுநாகப்பூ, சுக்கு, சிறுதேக்கு, தாளிசபத்திரி இவை வகைக்குத்தோலா 8, காட்டாத்திப்பூ தோலா 64, திராக்ஷை தோலா 80, இவைகளை ஓர் பானையில் போட்டு ஜலம் சின்னப்படி 64 விட்டு அதில் சர்க்கரை தோலா 400, தேன் தோலா 200, சேர்த்து நன்றாகக்கலக்கிப் பானையின் வாய்கரு மொத்துப்போட்டு ஒரு மாதம் அசையாமல் வைத்திருந்து எடுத்து வடிகட்டிப்பத்திரப் படுத்தவும். ஆஸ்த்மாவுக்கு நல்லது. குறிப்பு:—கரு ஊமத்தை சிலாக்கியம். அது கிடைக்காவிட்டால் சாதாரண ஊமத்தையை எடுத்துக்கொள்ளலாம். திராக்ஷை நீங்கலாக மற்றவைகளைக் காய்ந்த சரக்குகளாகவிருந்தால் இடித்து சல்லடையில் சலித்துப் பொடியாக்கவும். ஈரமாக இருப்பவைகளை நன்றாக இடித்துக் கொள்ளவும். அளவு அரை அவுன்சு முதல் 1 அவுன்சு வரை. ஆஸ்த்மாவுக்கு நல்லது.

46. சுவாஸகாஸ சிந்தாமணி:—ரசம், ஸ்வர்ணமாக்ஷிகம், தங்கம், வகைக்குத்தோலா 1, முத்துபஸ்மம் தோலா அரை, கந்தகம் தோலா 2, அப்பிரகசிந்தூரம் தோலா 2, அயச்சிந்தூரம் தோலா 4, இவைகளைக்கல்வத்திலிட்டு கண்டங்கத்திரிச்சார், ஆட்டுப்பால், அதிமதுரக்கஷாயம், வெற்றிலைச்சார், இவைகளால் தனித்தனி 7 பாவனைசெய்து இரு குன்றுமணியளவு மாத்திரையாக உருட்டிக் காயவைத்து வேளைக்கு 1 மாத்திரையை திப்பிலிப்பொடி தேன் இந்த அனுபானத்தில் சாப்பிட ஆஸ்த்மா தீரும். நுமோனியா விலகும். குறிப்பு:—ரசம், கந்தகம், இந்த இரண்டையும் சுத்தி செய்துகொண்டு கல்வத்திலிட்டு நன்ருக அரைத்துக்கொள்ளவும். மற்றவைகளைச் சிந்தூரம் செய்து சேர்க்கவும். உபயோகிக்கும் பொழுது தாளகபஸ்மத்தையும்சேர்த்துக்கொண்டுஆடாதோடைக் கஷாயம் அல்லது அமிர்தாரிஷ்டம் அனுபானமாகக் கொள்ளுவது பெரியோர் முறை.

47. மகாவாத சிந்தாமணி:—தங்கச்சிந்தூரம் தோலா 3, வெள்ளிபஸ்மம் தோலா 2, அப்பிரகசிந்தூரம் தோலா 2, அயச்சிந்தூரம் தோலா 5, பவழம் தோலா 3, முத்துபஸ்மம் தோலா 3, ரசபஸ்மம் தோலா 7, இவைகளைக் கல்வத்திலிட்டு குமரிச்சார்விட்டு அரைத்து இரு குன்றுமணியளவு மாத்திரைகளாக உருட்டி உலர்த்தி பத்திரப்படுத்திகொள்ளவும். வேளைக்கு 1 மாத்திரை தகுந்த அனுபானத்தில் கொடுக்க ஆஸ்த்மா விலகும். நுமோனியா முதலியவை தீரும். குறிப்பு:—இதற்கு பிருகத்வாத சிந்தாமணி என்று பெயர். தகுந்த அனுபானம் அதாவது கநகாசவம் முதலிய அனுபானத்தில் கொடுக்க ஆஸ்த்மாவும் நுமோனியாவும் தீரும்.

## க்ஷயம்—Pulmonary Tuberculosis.

48. நாகபலா:-நாகபலாவின் வேரைப்பொடிசெய்து அரைத் தோலாவை நெய் தேன் இவைகளில் குழைத்து தினம் இருவேளை சாப்பிட க்ஷயம் தீரும். குறிப்பு:—நாகபலாவென்பது ஓர் செடி. வடதேசத்தில் கிடைக்கக்கூடியது. இதன் தனிவேர் மிகவும் சிலாக்கியம். வேராகக் கிடைக்காவிட்டால் சமூலமாக எடுத்துக் கொள்ளவும்.

49. காகஜங்கா:—காகஜங்கா என்ற செடியின் வேரை முன் போலப்பொடிசெய்து அரைத்தோலா யிடையைப் பசும்பால் அல்லது வெள்ளாட்டுப்பாலில் கலக்கிச்சாப்பிட க்ஷயம் தீரும். குறிப்பு:- காகஜங்கா என்பது வடதேசத்தில் கிடைக்கும். இதுவும் நாகபலாவுக்கு அடுத்தபடியாக குணம் தரக்கூடிய மூலிகை.

50. கருபாதிசூர்ணம்:—மருதம்பட்டை, நாகபலாவேர் பூனைக்காலி விதை, இவைகளைச் சமயிடையாக எடுத்துப் பொடி செய்து பசும்பாலில் வேகவைத்து ஜீனி, நெய், தேன் இவைகளைச் சேர்த்துச்சாப்பிட க்ஷயம், க்ஷயகாசம் முதலியவை தீரும். குறிப்பு:- மருதமரத்தில் பலவகை யுண்டு. அதில் வெளுப்பான மரத்தின் பட்டை சிலாக்கியம். மருதம்பட்டையையும் நாகபலாவையும் இடித்து வஸ்திரகாயம் செய்துகொள்ளவும். பூனைக்காலிவிதையின் மேல்தோலை நீக்கி உள்ளிருக்கும் வெள்ளையான பருப்பை எடுத்து கல்வத்தில் அரைத்துக்கொள்ளவும். இந்த மூன்று சரக்கும் தனித்தனி தோலா 4, ஜீனி தோலா 4, பசும்பால் சின்னப்படி 1, இவைகளை அடுப்பேற்றி கொதிக்கவைத்து லேகியமாக வரும் சமயத்தில் நெய் தோலா 2 விட்டு ஆறின பிறகு தேன் தோலா ½ அரைவிட்டு நன்றாகக்கிளரிக்கொள்ளவும். வேளைக்கு 1 தோலா முதல் இரண்டு தோலாவரை சாப்பிடவும். இம்மருந்தை 5, 6 நாட்களுக்கு அதிகமாக வைத்திருக்கக் கூடாது. மருந்து கெட்டுப்போகும். ஆகவே கொஞ்சம் கொஞ்சமாகத் தயார்செய்து கொள்ளவேண்டும்.

51. தாளகபஸ்மம், வைக்ராந்தபஸ்மம், சுவர்ணமாக்ஷிகபஸ்மம் சுவர்ணபஸ்மம் இவைகளைச்சேர்த்துத் தகுந்த அனுபானத்துடன் உபயோகிக்க க்ஷயம் தீரும். குறிப்பு:-இவ்வியாதியில் தாளகத்தைவிட உயர்ந்தமருந்து கிடையாதென்பதே சாஸ்திரங்களாலும் அனுபவத்தாலும் அறிகிறோம். வடமொழி தென்மொழி நூல்களில் க்ஷயத்திற்கு எடுத்தது தாளகம் என்பது வியக்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. தாளகத்தில் பலவிதங்கள் இருக்கின்றன. அவற்றுள் பத்ரதாளகமென்பது உயர்ந்தது. அப்பிரகம்போல தகடு தகடாக உரிக்கவரும்தாளகத்தைப்பத்ரதாளகமென்பர். இதுதான் ஔ

ஷதத்திற்கு எடுத்தது. அதைச்சரியாகச் சுத்திசெய்து பஸ்மம் செய்தால் அது வேகமாக க்ஷய நோயைத்தணிக்கின்றது. சுத்தி முதலிய விவரம் சித்தர் முறை என்ற புஸ்தகத்தில் காணலாம்.

52. ராஜமிருகாங்கரசம்:—ரசபஸ்மம் 3 தோலா, சுவர்ணபஸ்மம் தோலா 1, தாமிரபஸ்மம் தோலா 1, சுத்திசெய்த மனோசிலை தோலா2, சுத்திசெய்த தாளகம் தோலா 2,(மனோசிலையையும்தாளகத்தையும் பஸ்மம்செய்து சேர்ப்பதுமிகவும் நல்லது.)சுத்திசெய்த கந்தகம் தோலா 2, இவைகளைக் கல்வத்திலிட்டு அரைத்துதேவையான சோகிகளுக்குள் அடைத்து ஆட்டின் பாலால் அரைத்த வெங்காரத்தைச் சோகிகளின் வாயில் நன்றாகப்பருமனாகப்பூசி அந்த சோகிகளை வெய்யிலில் காயவைத்து ஓர் மண் அகலில் வைத்து மேல் அகல்மூடி வாய்க்குச் சீலைமண்செய்து பிறகு அகல் முழுவதற்குமே சீலைமண்செய்து கஜபுடமிட்டு ஆறின பிறகு எடுத்து மேல் அகலை விலக்கி உள்ளிருக்கும் சோகிகளை எடுத்துக் கல்வத்திலிட்டு நன்றாகப்பொடிசெய்து சீசாவில் பத்திரப்படுத்தவும். வேளைக்கு 8கிரெயின்சு அளவுபத்து திப்பிலிப்பொடி தேனுடனாவது அல்லது 19 மிளகுப்பொடி நெய்யுடனாவது சேர்த்துக் குழைத்துக்கொடுக்கவும். குறிப்பு:—இவ்விடத்தில் ரஸ பஸ்மம் என்று இருந்தபோதிலும் சுத்திசெய்த ரஸத்தை எடுத்துக்கொள்வதுதான் வாடிக்கை. ரஸம் முதலிய 6 சரக்குகளில் முதலில் ரஸத்தையும் கந்தகத்தையும் சேர்த்துக் கல்வத்தில் அரைத்துப் பிறகு மற்றவைகளைச் சேர்த்துக்கொண்டு அந்தப்பொடி எவ்வளவு சோகிகளில் அடைபடுமோ அவ்வளவு சோகிகளை எடுத்துக்கொள்ளவும். சோகிகள் நல்ல பருமனாக இருக்கவேண்டும். அதாவது ஸ்திரீஜாதிகள் விளையாடும் பெரிய சோகிகளாக எடுத்துக்கொண்டு அந்தச் சோகிகளை இரண்டுமணி சாவகாசம் ஏதாவது ஓர் புளிப்பு ஜலத்தில் ஊரப்போட்டு எடுத்துக்கொள்ளவும் அந்தப்பொடியை அந்தச் சோகிகளில் அடைக்கவும். சோகிகளுக்குக் கணக்கு கிடையாது. பொடி தீரும்வரையில் அடைத்துப்பிறகு அந்தச்சோகிகளின் வாய்க்குப்பருமனாக வெங்காரத்தைப் பூசவேண்டும். இந்த வெங்காரத்திற்கும் அளவு கிடையாது. சோகிகள் பூர்த்தியாவது

தான் கணக்கு. வெய்யிலில் காயவைக்கவும். அச்சமயம் சோகிகள் தலைகீழாகக் கவிழ்ந்துவிட்டால் வாயில் பூசியிருக்கும் வெங்காரம் விலகி உள்ளிருக்கும் பொடி வெளியில் வந்துவிடும். அவ்விதமின்றி ஜாக்கிரதையாகக் கவனிக்கவேண்டும். பிறகு புடம்போடும் ஓட்டில் சோகிகளைப் பரப்பிமேல் ஓடுமூடி சீலைமண்செய்து அப்படியே கலையாமல் காயவைத்து ஓர் புடமிடவும். ஆறின பிறகு பார்த்தால் சோகிகளும் உள்ளடைத்த பொடிகளில் சிலபாகமும் மீதமிருக்கும். சோகிகள் வெளுப்பாக ஆகிவிடும். சோகிகளுக்கு உள்ளிருக்கும் மருந்துப்பொடிகளில் அந்தச் சுவர்ணமும் தாமிரமும் வாய்பாகத்தில் வெங்காரமும்தான் மீதமிருக்கும். மற்ற சரக்குகள் நெருப்பில் போய்விடும். ஆனால் தாளகமும் மனோசிலையும் பஸ்மமாகச்செய்து வைத்திருந்தால் அவையும் நிற்கும். ரசமும் கந்தகமும் நெருப்பில் போய்விடும். சோகிகள் க்ஷயநோய்களில் உயர்ந்த மருந்தாகக் கருதப்படுகின்றன. சோகி பஸ்மத்தில் கால்ஷியம் என்ற உப்புச்சத்து இருப்பதால் ஆங்கிலக்கொள்கைகளுக்கும் மிகவும் ஒற்றுமை காணப்படுகின்றது. உண்மையில் கால்ஷியம் மாத்திரமின்றி க்ஷய நோய்க்கு முறிவாகவும் சோகிகள் இருக்கின்றன.

"ரிதே குஷ்டம் ரக்தபித்தம் அன்யான்ரோகான் விநாசயேத்" குஷ்டநோய் ரக்தபித்தம் என்ற நோய் ஆக இந்த இரண்டு நோய்கள் நீங்கலாக மற்ற எல்லா வியாதிகளுக்கும் சோகிகள் உயர்ந்த மருந்தாக இருக்கின்றன. இவ்விதம் சாஸ்திரம் க்ஷய நோய்களுக்குக்குறிப்பான மருந்தாகச் சொல்லியிருப்பது அனுபவத்திற்கும் பொருத்தமாக விருக்கின்றது. அநேகமாகத்தாளக பஸ்மத்திற்கு அடுத்த உயர்ந்த மருந்தாக இதைக்கொள்ளலாம்.

53. சங்கபோடலீ:—சுத்திசெய்த ரசம் 1 தோலா, சுத்திசெய்த கந்தகம் தோலா 1, சங்குபஸ்மம் தோலா 4, சோகிபஸ்மம் தோலா 6, மிளகுப்பொடி தோலா 12, சுத்திசெய்த வெங்காரம் தோலா கால், இவைகளைக்கல்வத்திலிட்டு நன்றாகப்பொடிசெய்து பத்திரப்படுத்தவும். வேளைக்கு 10 கிரெயின்சுமுதல் 20 கிரெயின்சு வரை நெய்யில் சாப்பிடவும். க்ஷயம் தீரும். குறிப்பு:—கல்வத்தில்

முதலில் கந்தகத்தைப் பொடிசெய்து பிறகு ரசத்தைச்சேர்த்து மர்த்தித்துக்கொள்ளவும். சங்கபஸ்மத்தை முன்சொன்ன சோகி பஸ்மம் முறையில் சுத்திசெய்து அவ்விதமே பஸ்மம் செய்து கொள்ளவும். சங்கம் என்பது சிறு குழந்தைகளுக்குப் பால் போட்டுவதற்கு சாதனமாக வழக்கத்தில் இருந்து வருவதே. அதை நன்றாக பொறுக்கிச் சுத்திசெய்து பிறகு பஸ்மம் செய்து கொள்ளவும், பஸ்மம் செய்தபிறகு இடைப்படி பஸ்மத்தை நிறுத்துக்கொள்ளவும். பிறகு கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கொள்ளவும். இம்மருந்தும் அனுபவத்தில் உயர்ந்த முறையாகக் காணப்படுகின்றது. பிரயாகையில் வசித்த ஓர் மோரேசுவரபண்டிதர் என்ற வைத்யரால் அனுபவத்தில் பலன்கண்டு வைத்யாமிருதம் என்ற நூலில் எழுதப்பட்ட முறை. சிரமமில்லாமல் சுவல்ப சிலவில் செய்யக்கூடிய முறை அதிசாரம், கிரஹணீ என்ற நோய்களிலும் குணம் கொடுக்கக்கூடியது.

54. கோலாதிகிருதம்:—இலந்தைக்கொட்டைக் கஷாயம், கொம்பரக்குக்கஷாயம், பசுநெய் வகைக்குச்சின்னப்படி 1, பசும் பால் படி 8, இதில் பெருவாகை, மரமஞ்சள்பட்டை, வெப்பாலைப் பட்டை, வெப்பாலையரிசி, வகைக்குத்தோலா 4 எடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்துபோட்டு கலக்கிப்பதமாகக்காய்ச்சி உபயோகிக்க க்ஷய நோயும் அதில் காணும் ரக்தவாந்தியும் தீரும். குறிப்பு:- இலந்தைக்கொட்டை கொம்பரக்கு இவை வகைக்குத்தோலா 32 எடுத்து இடித்து ஓர் பானையில் போட்டு அதில் ஜலம் சின்னப்படி 8 விட்டு நான்கில் ஒன்றாக வற்றவைத்து வடிகட்டிக்கொள்ளவும். இது க்ஷய நோயில் காணும் ரக்தவாந்தியைத்தீர்க்கும்.

55. கூச்மாண்டலேகியம்:—நல்ல பழுத்த சாம்பல்பூசினிக் காயை எடுத்து மேல் தோலையும் உள் அசாரபாகத்தையும் விலக்கி நல்ல சதைப்பற்றுள்ள பாகத்தைமாத்திரம் எடுத்து கொப்பரைத் துருவியால் துருவி தோலா 400 எடுத்து ஓர் பாத்திரத்தில்போட்டு அடுப்பேற்றிக்கொஞ்சம் வேகவைத்துக்கீழே இறக்கி அந்தப்பூசினித்தூளை நன்றாகப்பிழிந்து அந்த ரசத்தைத்தனியாகப் பத்திரப் படுத்திக்கொண்டு ஓர் இரும்புச்சட்டியில் அந்தத்தூளைமாத்திரம்

போட்டு அடுப்பேற்றி பசுநெய் சின்னப்படியில் இரண்டு விட்டு ஓர் இரும்புச்சட்டுவத்தால் கிளரிக்கொடுத்து அந்தப்பொடி பவுன்நிற மாக வறுபட்டவுடன் ஏற்கனவே பத்திரப்படுத்தி வைத்திருக்கும் அந்த ரசம் முழுவதையும் அதில்விட்டு ஜீனிதோலா 400 சேர்த்து அதில் திப்பிலி, சுக்கு வகைக்குத்தோலா 4, ஜீரகம் தோலா 8, சன்னலவங்கபபட்டை, பச்சிலை, ஏலம், மல்லிவிதை, மிளகு, வகைக் குத்தோலா 2 இவைகளை யிடித்துப்பொடிசெய்து போட்டு லேகிய மாகக்கிளரி ஆறின பிறகு தேன் சின்னப்படி ஒன்று சேர்த்து நன் றாகக்கிளரி பத்திரப்படுத்தவும். தினம் இருவேளை சாப்பிடவும் வேளைக்கு 1 தோலா முதல் 2 தோலா வரையில் உபயோகிக்கலாம். க்ஷயத்தில் நுரையீரல்களில் காணும் புண்கள் (cavities) ஆறும். குறிப்பு:—இந்த லேகியம் சாதாரணமாக க்ஷயத்தில் கொடுப்பதால் அதிக பலன் அளிப்பதில்லை. ஆனால் சுவாசப்பைகளில் cavities என்ற புண்கள் இருந்தால் அவைகளை ஆற்றிவிடுகின்றது.

56. **வாஸிஷ்ட ரஸாயனம்:**—தசமூலம், குருந்தொட்டி, மருள் கிழங்கு, மஞ்சள், மரமஞ்சள், திப்பிலி, யானைத்திப்பிலி, மலைதாங்கி வேர்அமுக்கராவேர், நாயுருவிவேர், பூனைக்காலிவிதை, அதிவிடயம், சீந்திற்கொடி, பில்வப்பிஞ்சு, சிவதைவேர், தந்திவேர், கொடுவேலி இலை, க்ஷீரகாகோலி, (இது கிடைக்காவிட்டால் அதற்குப்பதிலாக அமுக்கராக்கிழங்கை எடுத்துக்கொள்ளவும்) வெப்பாலைப்பட்டை சடாமஞ்சி, வேங்கை, (இதன் உள்ளிருக்கும் வைரமானபாகத்தை எடுத்துக்கொள்ளவும்) போளம், சேங்கொட்டை, நறுவிளிவேர், தண்ணீர்விட்டான்கிழங்கு, முட்புங்கப்பட்டை, சரக்கொன்றை, கார்போகவரிசி, மருதோன்றிவேர், முருங்கப்பட்டை, வேப்பம் பட்டை, நீர்முள்ளிவிதை, இந்த 42 சரக்குகளும் வகைக்குத் தோலா 4, யவதான்யம் 512 தோலா, கடுக்காய் 1100, இவைகளை ஒன்றுசேர்த்து நிறுத்து அந்த இடைக்கு எட்டு பங்கு சுத்த ஜலம் விட்டு கஷாயம் வைத்து யவதான்யம் வெந்தவுடன் இறக்கிக்கஷா யத்தை வடிகட்டிக்கொண்டு அந்தக்கஷாயத்தை ஓர் இரும்புவாணு யில் விட்டு அந்தக்கடுக்காய்களையும் அப்படியே போட்டு அதில் சர்க்கரை தோலா 400-ம் நெல்லிக்காய்ச்சார் சின்னப்படி இரண்டும்

சேர்த்து நல்லெண்ணெ, பசும்நெய் வகைக்குச்சின்னப்படி இரண்டு சேர்த்து ஆறின பிறகு தேன் சின்னப்படி 4 சேர்த்து அதில் திப்பிலிப்பொடி 16 தோலா, சன்னலவங்கப்பட்டை, பச்சிலை, ஏலம் வகைக்குத்தோலா 4 இடித்துப்பொடிசெய்து சேர்த்து நன்றாகக் கலந்து ஒருமாதம் தான்யபுடம் வைத்து எடுத்து உபயோகிக்க க்ஷயம் தீரும். குறிப்பு:—யவதான்யம் வடதேசத்தில் கிடைக்கும், கடுக்காய் நல்ல பருமனாக விருப்பதாகப்பார்த்து பொருக்கிக் கொள்ளவேண்டும். 42 கஷாயசாமான்களை இடித்துக்கொள்ளவும். யவதான்யத்தையும் கடுக்காயையும் அப்படியே இடிக்காமல் எடுத்துக்கொள்ளவும். எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்துக்கஷாயம் செய்யவும். நெல்லைப்புழுக்குவதுபோல அந்தப்பதம் யவதான்யத்தில் வந்தவுடன் இறக்கிக கஷாயத்தைத் தனியாக வடிகட்டி வைத்துக்கொள்ளவும். கடுக்காயை மாத்திரம் பத்திரமாக எடுத்து அதை இரண்டாக நறுக்கி உள்ளிருக்கும் விதையை மாத்திரம் தள்ளிவிட்டு அந்த கடுக்காய் துண்டுகளை ஓர் இரும்பு பாத்திரத்தில் போட்டு அளவுப்படி நல்லெண்ணெயையும் நெய்யையும்விட்டு வதக்கவெண்டும். சற்று வதக்கினபிறகு அந்தக்கஷாயத்தையும் நெல்லிக்காய்ரசத்தையும் சேர்த்துப்பிறகு சர்க்கரைக் கடுக்காய்த் துண்டுகள ஆகிய இவைகளைச்சேர்த்து லேகிய பதமாகக்கிளரவும். மற்ற லேகியங்களைப்போல இது உருட்டவராது. ஜலமாகத்தான் இருக்கும். ஒரு கடுக்காயும் ஒருதோலா லேகியமும் ஒருவேளைக்கு உபயோகிக்கலாம். க்ஷயநோயில் மலபந்தமிருப்பது மிகவும் சகஜம். அக்காலங்களில் இதை உபயோகித்தால் மலபந்தம் விலகுவதுடன் க்ஷயநோய், இருமல், இவைகளும் விலகும். க்ஷயநோயில் சிலருக்கு அதிசாரம் காணுவதுண்டு. அக்காலங்களில் இம்மருந்தைக் கொடுக்கக்கூடாது. இம்மருந்து சரீரத்திற்குப் புஷ்டியையும் தரும். முன்சொன்ன மாத்திரைகளில் ஏதாவது உபயோகித்து அதற்கு அனுபானமாக இதைச்சாப்பிட்டால் மிகுந்த நன்மைசெய்யும். சாதாரண இருமல்களிலும் காசநோய்களிலும் இம்மருந்து ஒப்புயர்வற்றது.

57. ஸர்பிர்குடம்:—குருந்தொட்டி, நிலப்பூசினிக்கிழங்கு (இதை முதக்கன்கிழங்கு எனமலையாளத்தில் சொல்லுவார்கள்)கண்

டங்கத்திரிவேர், முள்ளிவேர், ஓரிலைவேர், மூவிலைவேர், சிருநெருஞ் சில்வேர். இதைச்சிறியபஞ் சமூலமெனச் சொல்லுவார்கள்) வெள்ளைச்சாரணத்தி, ஆல், அரசு, அத்தி. இச்சி, வஞ்சி, (இந்த ஐந்து மரங்களுககும் ஐந்து க்ஷீரிமரங்களெனப்பெயர்) இந்த ஐந்து மரங்களின் மொக்குகள், இவை வகைக்குத்தோலா 4, இடித்துப்பானையில்போட்டு ஜலம் சின்னப்படியில் 13 படி விட்டு நான்கில் ஒன்ருகக்கஷாயம்செய்து வடிகட்டி அந்தக்கஷாயத்தை ஓர் இருப்புச் சட்டியில் விட்டு அதில் சின்னப்படியில் 6½ படி பசும்பால், முதக் கன்கிழங்குச்சார், ஆட்டுமாமிசக்கஷாயம், வகைக்குச் சின்னப்படி 3¼, பசுநெய் சின்னப்படி 8 சேர்த்து அதில் காகோலி, க்ஷீரகாகோலி, அடபொதியன்கிழங்கு, மேதா, மகாமேதா, ஜீவகம், ரிஷபகம், அதிமதுரம், பயறின்கொடி காட்டு உளுந்தின் கொடி (இந்தப் பத்து சரக்குகளுக்கும் ஜீவநீயகணமெனப்பெயர். இவற்றுள் அடபொதியன்கிழங்கு, காட்டு உளுந்தின்கொடி, பயறின்கொடி, அதிமதுரம் இந்த நான்கும் சுலபமாகக்கிடைக்கும். மற்ற 6சரக்குகளும் வடதேசத்தில் கிடைக்கின்றன.) இவை வகைக்குத்தோலா ஒன்று இடித்துப்பொடிசெய்து கலந்து கிருதபதமாகக்காய்ச்சி வடிகட்டி அதில் ஜீனிதோலா 128, கோதுமைப்பொடி, திப்பிலிப்பொடி, மூங்கிலுப்புப்பொடி, பானீயபலம் என்ற சரக்கின் பொடி (ஷை சரக்கு வடதேசத்தில் கிடைக்கும்) வகைக்குத்தோலா 16 தேன் தோலா 16 சேர்த்துக்கலந்து பூர்ஜமரத்தின் இலையில்சுற்றிவைத்துபத்திரப் படுத்தவும். ஒரு தோலா முதல் இரண்டுதோலா வரை சாப்பிடவும். அனுபானம் பால் முதலியன. க்ஷயம், க்ஷயகாசம், ரக்தவாந்தி, சரீர இளைப்பு நீங்கும். உடம்பு புஷ்டியாகும். குறிப்பு:– ஆட்டுமாமிசக்கஷாயம் செய்யும் விதம். ஆட்டுமாமிசம் தோலா 52 எடுத்து சிதைத்து ஓர் பானையில்போட்டு ஜலம் சின்னப்படியில் 13 படி விட்டு நான்கில் ஒன்ருக வற்றவைத்து வடிகட்டிக்கொள்ளவும். இந்தக்கஷாயத்தையும் சேர்த்து இந்த மருந்து தயாரிப்பது தான் வடதேசத்து முறை. இவ்விதமே அமிருதப்பிராசம் என்ற கிருதமும் வடதேசத்தில் தயார்செய்யப்படுகின்றது. ஆனல் இந்த மாமிசக்கஷாயத்தில் விருப்பமில்லாதவர்களுக்கு அந்தக்கஷாயத்தைச் சேர்க்காமலே இம்மருந்தைத்தயார்செய்து

இதில் தேவதாரு. வாய்விளங்கம், அமுக்கரா, கோரைக்கிழங்கு, மஞ்சள், ஜீவகம், ரிஷபகம், மருள்கிழங்கு, திப்பிலி, அரத்தை, கடுக்காய்ப்பூ, சிருதேக்கு, திராக்ஷை, காகோலி, க்ஷீரகாகோலி, சுக்கு, அதிமதுரம், சர்க்கரை, ஓரிலை, காட்டு உளுந்து, வகைக்கு $\frac{3}{4}$ தோலா பொடிசெய்து சேர்த்துப் பதமாகக்காய்ச்சி உபயோகிக்க க்ஷயம், காசம், தீரும்.

200. காகமாசீகிருதம்:—மணத்தக்காளி இலை ரசம் படி 4 பசு நெய், அல்லது நல்லெண்ணெ, சின்னப்படி 1, அதில் அதிமதுரம் தோலா $16\frac{2}{3}$ இடித்துப்பொடிசெய்து போட்டுப் பதமாகக் காய்ச்சி உபயோகிக்கத்தொண்டைக்கம்மல் தீரும்.

201. லசுனாதி:—உள்ளிப்பூண்டு தோலா 400, தசமூலம், கடுக்காய், தேவதாரு, ஆவிப்பட்டை, செங்கொட்டிவேர், மலை தாங்கிவேர், வெப்பாலையரிசி, தேசாவரம், கொட்டைக்கரந்தை, முடக்கொத்தான், காட்டுக்கரணைக்கிழங்கு, இவை வகைக்குப்பலம் 10 (அதாவது 40 தோலா) இடித்து ஓர் பானையில் போட்டு 48 படி ஜலம்விட்டு நாலிலொன்றாகக் காய்ச்சி வடிகட்டி ஓர் இரும்புச் சட்டியில் அக்கஷாயத்தை விட்டு அதில் 4 படி (பெரியபடி) பசுநெய் விட்டு அதில் பஞ்சகோலம்' வில்வம், ஏலம், ஜீரகம், ஓமம், இந்துப்பு, மலைதாங்கிவேர், பெருங்காயம், பூனைக்காலிவிதை, திரிபலை, அதிமதுரம், கரும்புவேர், இவை வகைக்குத் தோலா 2 இடித்துப் போட்டு பெரிய படியில் 16 படி பசுமோர், பசும்பால் பெரிய படி 8, பச்சை மஞ்சள்சார், துப்பைச்சார், புளியாரைச்சார், இவைகளை தனித்தனி நெய்யளவு சேர்த்துப் பதத்தில் காய்ச்சி உபயோகிக்க மூலம், குன்மம், சூலை இவை தீரும்.

202. ஹ்ரீபேராதி:—வெட்டிவேர், கொடுவேலி, கூகை நீர் கிழங்கு, கருநெய்தல் கிழங்கு, வெள்ளிலோத்திப்பட்டை, சந்தனம், மலைதாங்கிவேர், அதிவிடயம், தேவதாரு, சடாமாஞ்சி, கோரைக்கிழங்கு, சுண்டைவேர், சுக்கு, காட்டாத்திப்பூ, யவக்ஷாரம், வகைக்குத்தோலா 1 இடித்துப் பொடிசெய்து அதில் பசு நெய் சின்னப்படி 1, புளியாரைச்சார் சின்னப்படி 4 இவைகளைச்

சேர்த்துப் பதத்தில் காய்ச்சி வடிகட்டி உபயோகிக்க மூலம், அடி தள்ளுதல் முதலியவை தீரும்.

203. தார்வீபலாதி:-மரமஞ்சள், குருக்தொட்டி, சிருநெருஞ்சி மூவிலை, நாயுருவி, வெப்பாலைப்பட்டை, ஆலம்மொட்டு, அத்தி மொட்டு, இச்சிமொட்டு, அரசங்கொழுந்து, மூக்கரைச்சாரணை, வகைக்குத்தோலா 4 இடித்துப் பானையில் போட்டு சின்னப்படியில் 11 படி ஜலம் விட்டு எட்டில் ஒன்றாக வற்றவைத்து வடிகட்டி அதில் பசுநெய் பால்வகைக்குப்படி அரைவிட்டு அதில் சந்தனம், ஓமம், கோஷ்டம், சதாவரி, அதிமதுரம், வெட்டிவேர், பஞ்ச கோலம், நன்னாரி, ஓரிலை, பில்வம், தேவதாரு, சுக்கு, குமிழ், கடுகு ரோகிணி, அஞ்சனம், கோரைக்கிழங்கு, கண்டங்கத்திரி, அட பொதியன், அதிவிடயம், கிராப்பு, ஆகிய இவை வகைக்கு விராக னிடை எடுத்து இடித்துப்பொடித்துப்போட்டு அதில் புளியாரை ரசம், மருக்கொன்னைரசம் இவைகளை வகைக்கு அரைப்படிசேர்த் துக்காய்ச்சி வடிகட்டி உபயோகிக்க ரக்தமூலம் தீரும்.

204. பாடாகரஞ்ஜாதி:—மலைதாங்கி, ஆவிப்பட்டை, புங்கம் பட்டை, கொடுவேலி, முட்காய்வேளை, சுக்கு, கோரைக்கிழங்கு, புளியம்வேர், புளியங்கொழுந்து, வெப்பாலைப்பட்டை, தேசாவரம், செங்தொட்டி, வகைக்குத்தோலா 4 எடுத்து இடித்து 12 படி ஜலம் விட்டு நாலில் ஒன்றாகக்காய்ச்சி வடிகட்டி அதையும் நெய், இஞ்சிரசம், புளியாரைரசம், பசுமோர், பசுப்பால் இவை வகைக்கு சின்னப்படி முக்கால்விட்டு சேர்த்து அதில் வெப்பாலையரிசி, அதி மதுரம், சிருதேக்கு, பெருவாகை, வெப்பாலையரிசி, பெருங்காயம், அதிவிடயம், திரிகடு, சுருந்தொட்டி, பில்வம், தேவதாரு, ஏலம், லவங்கப்பட்டை, திராக்ஷை, ஓமம், இந்துப்பு, ஜீரகம், இலந்தைக் கொட்டை, சந்தனம், மல்லிவிதை, வகைக்குத்தோலா அரை எடுத்து இடித்துப் பொடிசெய்து போட்டுக்காய்ச்சிப் பதத்தில் வடித்து உபயோகிக்க அதிசாரம் தீரும்.

205. பாடாகரஞ்ஜாதி:-மலைதாங்கிவேர், செவ்வியம், புங்கை, ஆவிப்பட்டை, முட்காய்வேளை, கொடுவேலி, கோரைக்கிழங்கு, சுக்கு, இவை வகைக்குத்தோலா 4 எடுத்து இடித்து சின்னப்படி8

ஜலம் விட்டு நாலில் ஒன்றாகக் காய்ச்சி வடிகட்டி அதில் இந்துப்பு, பஞ்சகோலம், அதிவிடயம், யவக்ஷாரம், சத்திக்ஷாரம், பெருங் காயம், தேசாவரம், செவ்வியம், கொடுவேலி, ஏலம், ஓமம், மிளகு (இதற்கு இங்குவாதி எனப்பெயர்) ஜீரகம், கருஞ்ஜீரகம், ஓமம், இவை வகைக்குத்தோலா முக்கால் இடித்துப் பொடிசெய்து போட்டு அதில் பசுநெய் படி 1, ஆட்டுத்தயிர் படி 1, இஞ்சிச்சார் படி 1, புளியாரைச்சார் படி 1, சேர்த்துப் பதமாகக் காய்ச்சி உப யோகிக்க குன்மம் கிரஹணி தீரும்.

206. பஸ்த்யாமயாந்தகம்:—மரமஞ்சள், இலுப்பைக்கட்டை, பொன்னாங்காணி, ஓரிலைத்தாமரை, சிருபீளை, (இதை கல்லூர்வஞ்சி என மலையாளத்தில் சொல்வர்) கண்டங்கத்திரி, முள்ளி, ஓரிலை, மூவிலை, நன்னாரி, கரும்புவேர், பெருங்கோரைக்கிழங்கு, கொட் டைக்கரந்தை, நீர்முள்ளி, வெள்ளைச்சாரணை, (இதைத் தார்தாவல் என்பர்) முருங்கை, வெட்டிவேர், நிலப்பனைக்கிழங்கு, மாவிலிங் கம்பட்டை, திராக்ஷை, குமிழ், அதிமதுரம், சிருநெருஞ்சி, இவை வகைக்குத்தோலா 12. சிருநெருஞ்சி தோலா 276, இவைகளை இடித்து ஓர் பானையில்போட்டு ஜலம் படி 16 விட்டு நாலில் ஒன்றா கக்காய்ச்சி வடிகட்டி எடுத்து அதில் பசுநெய் படி 1, பசும்பால் தண்ணீர்விட்டான் ரசம், நெல்லிக்காய்ச்சார், கோவைச்சார், இளநீர், பூசிணிச்சார், வெள்ளரிக்காய்ச்சார், இவை வகைக்குப்படி 2 சேர்த்து, சிற்றீந்தில், கருநெய்தல்கிழங்கு, ஏலம், இலுப்பை, சந் தனம், தேவதாரு, திரிபலை, திப்பிலி, அரேணுகம், சுக்கு, இந் துப்பு, யானைத்திப்பிலி, நாயுருவி, மஞ்சிஷ்டி, தாமரையிதழ், கோரைக்கிழங்கு, மல்லிவிதை, லோத்திப்பட்டை, அமுக்கரா, மூக்கரைச்சாரணை, பூனைக்காலிவிதை, நீர்முள்ளிவிதை, காட்டுக் கொள், கர்காடகசிருங்கி, வகைக்கு விராகனிடை 2 ($\frac{5}{8}$ தோலா) கல்மதம் விராகனிடை 1 இடித்துப்பொடிசெய்து போட்டுக்காய்ச் சிப்பதத்தில் வடித்து உபயோகிக்க கல்லடைப்பு, மூத்திரகிருச் சிரம், முதலிய பஸ்திரோகங்களனைத்தும் தீரும்.

210172



207. த்ரைகண்டகம்:—சிருநெருஞ்சில், ஏலம், கல்மதம், சிருபீளை, அதிமதுரம், சதாவேரி, இவைகளை வகைக்குத்தோலா 4 எடுத்து இடித்து ஓர் பானையில் போட்டு சின்னப்படியில் 6 படி ஜலம்விட்டு நாலிலொன்ருக வற்றவைத்து வடிகட்டி அதில் தாப்பை வேர், திராக்ஷை, வெட்டிவேர், திப்பிலி, வெள்ளைச்சாரணை, யானைத் திப்பிலி, நாணல்வேர், கரும்புவேர், பொன்னுங்காணி, இவைகளை வகைக்கு முக்கால் தோலா பொடிசெய்து போட்டுப் பதமாகக் காய்ச்சி உபயோகிக்க மூத்திரதோஷங்கள் நீங்கும்.

208. சதாவர்யாதி:—தண்ணீர்விட்டான் கிழங்குரசம், சிருநெரிஞ்சிரசம் வகைக்குச் சின்னப்படி 4, பசுநெய் படி 2, பசும் பால்படி 4, பால்முதக்கன், சந்தனம், கூகைநீர், திராக்ஷை, அதிமதுரம், பெருங்கோரைக்கிழங்கு, வெள்ளரிவிதை, ஏலம், கல்மதம், திப்பிலி, நெய்தல்கிழங்கு, ஒரிலைத்தாமரை, பொன்னுங்காணி, கோரைக்கிழங்கு, காகோலி முதலிய எட்டு சரக்குகள், ஆகிய இவை வகைக்குத்தோலா $1\frac{1}{2}$ பொடித்துப்போட்டுப் பதமாகக் காய்ச்சி ஆறின பிறகு தேன்படி 1-ம் சர்க்கரை தோலா 32-ம் அதில் சேர்த்துச்சாப்பிட மூத்திரப்பையை பொட்டிய வியாதிகள் தீரும்.

209. ஆகுல்யாதி:-ஆவாரைவிதை, தேத்தான்விதை, செத்தி வேர், மஞ்சள், ஏகநாயகம்வேர், நெல்லிவற்றல், சிருபீளை, முருங்கப் பட்டை, சாரணை, ஓரிலை, மூவிலை, சிருநெரிஞ்சி, இவைகளை வகைக்குத்தோலா 4 எடுத்து இடித்து சின்னப்படி 12 படி ஜலம் விட்டு நாலில் ஒன்ருக வற்றவைத்து வடிகட்டி அதில் பசுநெய் படி முக்கால் பசும்பால் படி முக்கால் சேர்த்து முன் கிருதத்தில் சொன்ன பால்முதக்கன் முதலிய 22 சரக்குகளை வகைக்கு அரைத்தோலா இடித்துப்பொடிசெய்து போட்டுக் காய்ச்சி சாப்பிடபிரமேகநோய் தீரும். கிருதத்தில் 24 தோலா சர்க்கரை சேர்த்துக்கொள்ளவும்.

210. தாங்வந்தரகிருதம்:—தசமூலம், பூலாங்கிழங்கு, தந்தி வேர், தேவதாரு, வெள்ளைச்சாரணத்திவேர், சிகப்புச்சாரணத்தி வேர், சதுரக்கள்ளிவேர், எருக்கம்வேர், கடுக்காய், நிலக்கடம்பு, சேங்கொட்டை, புங்கைவேர், மாவிலிங்கவேர், தேசாவரம்,

வைத்தியச்செய்தி

## ஆஸவாரிஷ்டங்

சென்னை மதுவிலக்குச்சட்டத்தின்கீழ் ஆ
இருந்த தடை நீக்கப்பட்டுவிடலாமெனடாக்டர்
கள் பத்திரிகைகளுக்கு விடுத்திருக்கும் செய்தியா
ஷை சட்டத்தால் ஆஸவாரிஷ்டங்களுக்குத்தடை ே
சுதேசவைத்தியர்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் சொ
மன்று. இவ்வித கஷ்டங்களை உணர்ந்து அரசாங்கத்த
யப்போகும் விலக்குகளுக்குச் சுதேசவைத்தியர்கள் நன்
மிகவும் கடமைப்பட்டவர்கள். பொது ஜனங்களின் உ
மதித்து தகுந்த சமயத்தில் அரசாங்கத்தார் முயற்சியை
கின்றோம். இவையனைத்துக்கும் காரணமான டாக்டர் வ
அவர்களின் விடாமுயற்சியையும் பாராட்டுகிறோம்

டாக்டர் T. S. சுப்ரமண்யம்,
காரியதரிசி, சுதேச வைத்திய ஸ
மதுரை.

---

## திராவிட வைத்யமண்டலம்.

ஷை மண்டலத்தின் 10-வது ஸம்மேளனத்தை இ
ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் மதுரையில் நடத்
வைத்திய ஸபையின் ஆதரவில் 22—4—39-ல் காக்காத்
தெரு சூரியநாராயண சாஸ்திரியார் பாடசாலையில் வைத்
ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மதுரை டாக்ட
நாதய்யர் அவர்கள் தலைமை வகித்தனர். மதுரை
சேர்மன் ஸ்ரீமான் N. M. R சுப்பராமன் M. L. A.
தலைவராகக்கொண்ட ஓர் உபசாரணைக்கமிட்டி அமைக்
ஸ்ரீரங்கம் டாக்ட்ர் V. சுப்பிரமணியம் அவர்கள் கூடவி
காரியங்களையும் நடத்திக்கொடுத்தனர். மகாநாட்டில்
கொள்ள விரும்புவோர்கள் அடியிற்கண்ட விலாசத்தி
தெரிந்துகொள்ளலாம்.

டாக்டர் T. S. சுப்ரமண்
உபசாரணைக்கமிட்டிக்காரிய
35, காக்காத்தோப்புத்தெரு,

20/10/95

Registered No. M. 4018.

## யாந்தக ரஸம்.

களுக்கு (Pulmonary Tuberculosis) ஓர் ஒ
தெனச் சுதேச நூல்களில் கூறப்பட்ட தாளக பஸ்
த பஸ்மம், ஸ்வர்ணமாக்ஷிக சிந்தூரம், ஆகிய இ
ளவுப்படி சேர்க்கப்பட்டு க்ஷயாந்தக ரஸமென்ற பெ
வரு காலமாக அநுபவத்தில் பரிசீலிக்கப்பட்ட இ
க்ஷய ரோய்களில் மிகுந்த குணம் கொடுக்கக் கூடியது
5 நாட்களுள் காய்ச்சல் முதலியவைகளைக் குறைத்துச் சி
ளுக்குள் பூர்ண சுகத்தை யளிக்கின்றது. 4, அல்லது
ளுக்குள் க்ஷய ரோய் பூர்ணமாக நிவர்த்தியாகும். இத்
வர்ண பஸ்மம் சேர்த்துச் சாப்பிடுவதும் நாகபலா லே
அநுபானமாகக் கொள்வதும் மிகவும் நல்லது.

| | | | | |
|---|---|---|---|---|
| க ரஸம் | ஒரு மாத மருந்து. | | விலை ரூ. | 10 |
| ர்ண சிந்தூரத்துடன் | ௸ | ௸ | விலை ரூ. | 20 |
| லேகியம் | ௸ | ௸ | விலை ரூ. | 5 |

தபால் சிலவு வேறு.

நந்தைக் காலை 6-மணி, சாயங்காலம் 6-மணி ஆக இரண்
ரில் தேனில் குழைத்துச் சாப்பிட வேண்டும். அரிசி
, பருப்பு, தயிர், பால், நெய், வெண்ணை. பாதாம்பருப்ப
ப்பு, ஆரஞ்சு, கொடிமுந்திரிப் பழம், ஜீர்ணமாகக் கூடி
முதலியன புஷ்டியாகச் சேர்த்துக் கொள்ளவும். சற்
இருந்தாலும் ஸ்நானம் கூடாது. காய்ச்சல நின்ற பிற
னம் செய்யலாம்.

ப்பு:— மருந்தைப் பரீக்ஷை செய்ய விரும்பும் வைத்தி
த்திரம் க்ஷயாந்தக ரஸம் (ஸ்வர்ண சிந்தூர மில்லாம
குக் கொடுக்கப்படும்.

சம்:—

பண்டிட் S. நாராயண அய்யங்கார்,
நெ. 2, போலீஸ் ஸ்டேஷன் மேற்கு சந்து,
மதுரை.